உ

சிவமயம்

# சைவநீதி

# SAIVANEETHI



மலர் 9 | பார்த்திப - ஆனி | June- July 2005 | இதழ் 3



ரூபா 25/=

# பொருளடக்கம்


பக்கம்

1. நலம் பல நல்கும் நல்ல பதிகங்கள் ........ 2

2. இன்பம் தருவது நீறு ........ 5

3. ஆலயங்கள் அமைக்கப்பட்டதன் நோக்கம் மனிதனின் தேவத்தன்மையை வெளிப்படுத்தலே ........ 7

4. சமய வழிபாட்டில் காவடி ஆட்டம் ........ 12

5. பிடித்த பத்து ........ 15

6. கந்தபுராண வசனம் ........ 19

7. அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும் ........ 22

8. அதனால் அவர் ஆசையுடையவர் ........ 24

9. திருத்தொண்டின் நெறி வாழ ........ 27

10. சந்தேகம் தெளிதல் ........ 28



சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.

- இதழ் நிர்வாகிகள்

உ
சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சைவநீதி

SAIVANEETHY

# சைவநீதி



மலர் 9 பார்த்திப - ஆனி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் - 03

**தொடக்குனர்:**
கலாபூஷணம், ஞானசிரோமணி,
சைவப்புலவர்மணி, வித்துவான்,
**திரு. வ. செல்லையா**

**மதியுரைஞர்:**
**சிவஸ்ரீ. கு. நகுலேஸ்வரக்குருக்கள்**

**திரு. D. M. சுவாமிநாதன்**
அறங்காவலர்,
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்

**திரு. அ. கந்தசாமி**
*Chairman U.P.S.*

**திரு. கு. மகாலிங்கம்**

**பதிப்பாசிரியர்:**
**திரு. வே. திருநீலகண்டன்**
லக்ஷ்மி அச்சகம்

**விநியோகம்:**
**திரு. க. சீனிவாசகம்**
ஓய்வுபெற்ற கோட்டக் கல்வி அதிகாரி

**நிர்வாக ஆசிரியர்:**
**திரு. செ. நவநீதகுமார்**
30, ரம்யா றோட், கொழும்பு-04.

தொடர்புகட்கு: *7.30 p.m. to 7.30 a.m.*

தொலைபேசி: 2580458

## மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்

இது திருஞான சம்பந்த மூர்த்திநாயனாரின் அருள்வாக்கு. சிவனடியார்களின் திருவாக்கு எப்பொழுதும் பொய்த்ததில்லை. பெரய்யடிமையில்லாத மெய்யடியார்கள் அவர்கள். அவர்களின் வாக்கு மணிவாக்கு. பலிக்கும் மந்திரம்போன்றது. மந்திரம், தேவு, மருந்து, குருவருள் என்பன மெய்யென்னில்மெய். பொய்யென்னில் பொய்யாகிப்போம்.

இங்கு நம்பிக்கை ஒன்றினைக்கொள்ளவேண்டும். நமது வாழ்க்கை நம்பிக்கையிலேயே தங்கியுள்ளது. நம்பிக்கையில் தன் நம்பிக்கை முதன்மையானது. தன்னம்பிக்கையுடன் முயற்சியும் வேண்டற் பாலது. இவை இரண்டுங்கூட நல்வாழ்க்கையும் அமையும். இவையின்றி நல்வாழ்க்கை கூடாதாம்.

முன்னைச்செய் புண்ணியப்பயனாய மண்ணிடை மானிடராய்ப் பிறந்தோம். அதுவுங்கூட குருடு செவிடு நீங்கிப்பிறந்தோம். அங்ஙனங்கிடைத்த நற்பேற்றுக்காக நாம் கடவுளை வணங்கி நன்னெறியில் ஒழுகல் வேண்டும். பொய், களவு, சூது அகற்றி நல்வழிபற்றி நன்முயற்சியோடு வாழ்தலே நல்ல வண்ணம் வாழ்தலாம். இவற்றுக்கெல்லாம் மனமே பிரதானமானது. **'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து'** எதிலும் ஓர் அளவு வேண்டும். அளவுக்கு மிஞ்சிய நினைப்பே பேராசையாகும். பேராசை நம்மைக் கெடுத்து விடும். அதனையும் அகற்றினால் தான் மண்ணின்மேல் நல்லவண்ணம் வாழ்தல் அமையும். மனம்போல வாழ்வு என்பதனையும் இங்கு நினைவு கூரவேண்டும்.

**'வாழ்க்கை வாழுதற்கே'** என்ற தாரக மந்திரத்தை எப்போதும் கடைப்பிடித்து வரவேண்டும். வாழ்வும் தாழ்வும் எங்கள் கையிலேயே இருக்கின்றன. எங்கள் செயற்பாட்டின் பிழையே தாழ்வு. இதுதான் நமக்குத்தீரா இடும்பையைத் தருகின்றது. எங்கள் செய்பாட்டுத்திறனே எங்களுக்கு நல்வாழ்க்கையை அமைத்துத் தருகிறது. நாம் வாழ்ந்தாற்போதும் என்றிருப்பது தவறு. நாமும் வாழ்ந்து பிறரும் வாழ்வதோடு நாடுஞ் சிறக்க வேண்டும்.

எழுநிலைமாடியில் மனைவிமக்களுடன் கூடிச் செல்வந்தராய் வாழ்தலே நல்ல வண்ணம் வாழ்தல் என்று கருதிவிடக்கூடாது. சிறு குடிசையாயினும் மாண்புடை மனைவியோடு பண்பான மக்களும் பெற்று அன்புடன் வாழ்க்கை வாழுதலே சிறந்த வாழ்க்கை. பின்னவர் வாழ்க்கையில் அன்பு, பண்பு, ஆதரவு பொலிகிறது. மகிழ்வும் உள்ளீடாக இருக்கிறது. ஒப்புடன் முகமலர்ந்து உபசரித்து உண்மைபேசி உப்பிலாக்கூழ் இட்டாலும் உண்பது அமிர்தமாகும். இது உள்ளத்தில் கள்ளமில்லா வாழ்க்கை. வாழ்க்கையின் திட்பநுட்பங்களைப் புரிந்துகொண்டு பண்பான வாழ்க்கை வாழ்தலே சிறந்தது.

# நலம் பல நல்கும் நல்ல பதிகங்கள்

தமிழ்மொழி இனிமையுடையது என்பார்கள். தமிழ்மொழியின் சிறப்பே அதன் தெய்வீகத் தன்மையில் தான் அமைந்துள்ளது எனலாம். தமிழால் வைதாலும் இறைவன் நம்மை நலமுடன் வாழவைப்பான் என்பார் அருணகிரிநாதப் பெருமான். எனில், தமிழால் வாழ்த்தினால் கிடைக்கும் பயன்களை அளவிட முடியுமா? அப்படி அளவிட முடியாப் பயன்களைத் தருவன தமிழ் வேதங்களாகத் திகழும் பன்னிரு திருமுறைகள்.

தமிழ் மக்களின் மாதவப் பயனால் இறைவனே அடியார்கள் மூலமாக அருளியவையே இப்பன்னிரு திருமுறைகளும், இதை அப்பரடிகள் என்று பாராட்டப்படும் திருநாவுக்கரசு சுவாமிகள்.

> "பத்திமையால் பணிந்து அடியேன்
> தன்னைப் பன்னாள்
> பாமாலை பாடப் பயில்வித்தானை"

என்று கூறுவதால் உய்த்துணரலாம். இறைவர் திருநாவுக்கரசு சுவாமிகளைச் சூலைநோய் கொடுத்து ஆட்கொண்டு தமிழ்வேதப் பாக்களைப் பாடும்படிச் செய்தார்.

மூன்று வயதில் திருஞானசம்பந்தர் பாடினார் எனில், இறையருள் அல்லவா பாடும்படிச் செய்தது. சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு அடியெடுத்து கொடுத்தும், பொன்முடிப்புத் தந்தும், வீடுதோறும் இரந்து உணவளித்தும், தூதுசென்றும் தமிழில் பாடும்படிச் செய்தது தெய்வத் திருவருள்தானே!

மணிவாசகப் பெருமானுக்கு குருவாய் வந்து உபதேசத்தை அளித்து, அதன் மூலம் உண்மையை உணர்த்தி 'திருவாசகம்' பாடும்படிச் செய்ததும், அப்பாடல்களை தாமே கேட்டருளியதும் இறைவனே அல்லவா?

சேரமான் பெருமான் கயிலாயத்தில் அருளிய 'திருக்கயிலாய ஞான உலா' இம்மண்ணுலகிற்குக் கிடைக்கும்படிச் செய்ததும் முழுமுதற் பொருளே அல்லவா?

'உலகெலாம்' என்று அடியெடுத்து உதவி சேக்கிழார் பெருமானைப் பெரியபுராணம் பாடும்படிச் செய்ததும் சிவபெருமானே ஆகும்.

இப்படி சிவபெருமானே தகுதியுடைய அருளாளர்கள் மூலமாக அருளியவையே தமிழ் வேதங்களாகத் திகழும் பன்னிரு திருமுறைகளும்.

பொன், கண், பொருள், கல்வி முதலியவைகள் பெறுவதற்கும், பிணிகள் தீரவும், குடும்பத்தில் வரும் எல்லாவிதமான இடர்களும் நீங்கவும், சுகமாக பிரசவிக்கவும், திருமணம் நடைபெறவும், பகைமை தீரவும், ஆன்மலாபம் அடையவும், வியாபாரத்தில் நன்மை அடையவும், நவக்கிரக தோஷங்கள் நீங்கவும், மனதில் நிம்மதி தோன்றவும், தீவினைகள் அகன்று நல்வினையைப் பெறவும், இயமன் அணுகாமலிருக்கவும், இம்மையில் எல்லாவித நலன்களையும் பெறுவதற்கும் சிவலோகம் ஆழ்வதற்கும் பதிகங்கள் அருளப்பட்டுள்ளன.

எல்லாவற்றுக்கும் மேலாக நாம் எடுத்த இந்த மானுடப் பிறவியின் பயனை அடைவதற்கு, (அவகதி வராமல் 'சிவகதி' அடைவதற்கு) ஸ்ரீருத்திர மந்திரமாக விளங்கும் அப்பரின் 'நின்ற திருத்தாண்டகம்' உள்ளது. மழை வேண்டுமா, பதிகம் உள்ளது. இப்படி உலக மக்கள் வேண்டுவனவற்றையெல்லாம் அளிப்பதற்கு இறைவனால் அருளப்பட்ட இத்திருமுறைகள் பெரும் செல்வங்கள் அல்லவா?

இவ்வாறாக நாயன்மார்களால் சைவ உலகுக்கு அளிக்கப்பட்ட இப் பதிகங்கள் எந்த அளவுக்குப் பெருமை வாய்ந்தன என்பதை நாமறிவோம். இப்படியான பதிகங்களைப் பாடிப் பலனடையாமல் சாத்திரம் என்றும், நேத்தி, பேய், பில்லி, சூனியம் என்று அதற்குப் பரிகாரம் தேடுதல் என்றும் தேவையற்றவற்றைக் கடைப் பிடித்துக் காலத்தை விணாக்குகிறோமே தவிர இப்பதிகங்களைப் பக்தி சிரத்தையுடன் ஓதி பலனடைவோம் என்று சிந்தித்துப் பார்ப்பதில்லை.

உண்மையான பக்தி சிரத்தையுடன் இறைவனைத் தியானம் செய்து மனமுருகிப் பாடி எமக்கு வேண்டிய பதிகங்களை நாள்தோறும் ஓதி வந்தால் இறைவன் அருள்வார் என்பது திண்ணம் என்பதை மனதில் நிறுத்தி ஒரு மனத்தோடு பாடிப் பயனடைவோமாக!

தொடர்ந்து அவற்றுக்குரிய பதிகங்கள் வர இருக்கின்றன. அவற்றைக் கைவிடாது தொகுத்து வைத்து அவ்வவற்றுக்குரிய பதிகங்களை ஓதி இறைவனருள் பெறுவோமாக!

## பதிகம் 1

இப்பதிகத்தை ஓதினால் நரம்புத் தளர்ச்சி, வாதம், வலிப்பு இரத்த அழுத்தம், நீரிழிவு முதலிய நோய்கள் குணமாகும்.

காழிப் பிள்ளையார் பல தலங்களையும் தரிசனம் செய்து கொண்டு திருப்பாச்சிலாச் சிரமம் எனும் இத்தலத்திற்கு எழுந்தருளினார். ''கொல்லிமழவன்'' எனும் அன்னாட்டு மன்னனுடைய மகளுக்கு ''முயலகன்'' எனும் தீராத நோயிருந்தது. சம்பந்தப் பெருமான் வருவதை அறிந்த அரசன் அன்புடன் அவரை வரவேற்றுத் தன் மகளின் நோயை நீக்கியருள வேண்டினான். அருள் உள்ளம் கொண்ட சம்பந்தப் பெருமான் ''துணிவளர் திங்கள்'' எனும் இப்பதிகத்தைப் பாடி இறைவனை வணங்க நோய் கதுமென மறைந்து ஒழிந்தது.

இன்றும் பலர் முழு நம்பிக்கையுடன் இப்பதிகத்தை ஓதி மேலே கண்ட நோயிலிருந்து விடுபடுவது உண்மையே ஆகும்.

**திருச்சிற்றம்பலம்.**

**திருப்பாச்சிலாச்சிராமம் பண்: தக்கராகம்**

துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ்சூழ
வாரிடமும் பலி தேர்வர்
அணிவளர் கோலமெலாஞ் செய்து பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல் செய்வதோ இவர் மாண்பே. 1

கலைபுனை மானுரி தோலுடையாடை
கனல் சுடரால் இவர் கண்கள்
தலையணி சென்னியர் தாரணிமார்பர்
தம் அடிகள் இவரென்ன
அலைபுனல் பூம்பொழில் சூழ்ந்தமர் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
இலைபுனை வேலரோ ஏழையை வாட
இடர் செய்வதோ இவரீடே. 2

வெஞ்சுடராடுவர் துஞ்சியருள் மாலை
வேண்டுவர் பூண்பது வெண்ணூல்
நஞ்சடை கண்டர் நெஞ்சிடமாக
நண்ணுவர் நம்மை நயந்து
மஞ்சடை மாளிகை சூழ்தரு பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
செஞ்சுடர் வண்ணரோ பைந்தொடி வாடச்
சிதை செய்வதோ இவர் சீரே. 3

கனமலர்க் கொன்றை அலங்கல் இலங்கக்
கனல்தரு தூமதிக் கண்ணி
புனமலர்மாலை அணிந்தழகாய
புநிதர் கொலாம் இவர் என்ன
வனமலி வண்பொழில் சூழ்தருபாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
மனமலி மைந்தரோ மங்கையைவாட
மயல் செய்வதோ இவர்மாண்பே. 4

மாந்தர் தம்பால் நறுநெய் மகிழ்ந்தாடி
வளர்சடை மேற்புனல் வைத்து
மோந்தை முழாக்குழல் தாளமோர் வீணை
முதிரவோர் வாய்மூரி பாடி
ஆந்தை விழிச்சிறு பூதத்தர் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
சாந்தணி மார்பரோ தையலை வாடச்சதுர்
செய்வதோ இவர் சார்வே. 5

நீறுமெய்புசி நிறைசடை தாழ
நெற்றிக் கண்ணாலுற்று நோக்கி
ஆறதுசூடி ஆடரவாட்டி
ஐவிரற் கோவண ஆடை
பாறரு மேனியர் பூதத்தர் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
ஏறதுஏறியர் ஏழையை வாட
இடர் செய்வதோ இவரீடே. 6

பொங்கிள நாகம் ஓர் ஏகவடத்தோடு ஆமை
வெண்ணூல் புனைகொன்றை
கொங்கிளமாலை புனைந்தழகாய
குழகர் கொலாம் இவரென்ன
அங்கிள மங்கையோர் பங்கினர் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
சங்கொளி வண்ணரோ தாழ்குழல் வாடச்
சதிர்செய்வதோ இவர் சார்வே. 7

ஏவலத்தால் விசயற்கருள் செய்து
இராவணனை யீடழித்து
மூவரிலும் முதலாய் நடு வாய
மூர்த்தியை யன்றி மொழியாள்
யாவர்களும் பரவும் மெழிற் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
தேவர்கள் தேவரோ சேயிழை வாடச்
சிதை செய்வதோ இவர் சேர்வே. 8

மேலது நான்முகன் எய்தியதில்லை
கீழது சேவடி தன்னை
நீலது வண்ணனும் எய்தியதில்லை
யென இவர் நின்றதுமல்லாமல்
ஆலதுமாமதி தோய் பொழிற் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
பாலது வண்ணரோ பைந்தொடி வாடப்
பழிசெய்வதோ இவர் பண்பே. 9

நாணொடு கூடிய சாயினரேனும்
நகுவரவர் இருபோதும்
ஊணொடு கூடியவுட்கு நகையாலுரை
களவை கொள வேண்டா
ஆணொடு பெண் வடிவாயினர் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
பூண் நெடு மார்பரோ பூங்கொடிவாடப்
புனை செய்வதோ இவர்பொற்பே 10

அகமலி அன்பொடு தொண்டர் வணங்க
ஆச்சிரமத் துறைகின்ற
புகைமலி மாலை புனைந்தழகாய
புனிதர் கொலாம் இவரென்ன
நகைமலி தண்பொழில் சூழ்தரு
காழிநற்றமிழ் ஞானசம்பந்தன்
தகைமலி தண்டமிழ் கொண்டிவையேத்த
சாரகிலா வினை தானே. 11

(பதிகம் முற்றிற்று)

திருச்சிற்றம்பலம்.

# இன்பம் தருவது நீறு

வ. குகசர்மா

சிவ சின்னங்களில் மிகவும் போற்றப்படுவது விபூதியாகும். விபூதியின் பெருமையை பதிகத்தில் அமைத்துப் பாடியவர் ஞானசம்பந்தர். அப்பதிகத்தில் உள்ள ஒருவரியே மேற்சுட்டிய தலையங்கம் ஆகும். இன்பம் எப்படி உண்டாகும். அதற்குரிய விடை அப்திகம் முழுவதும் பரந்து கிடக்கின்றது. பிறவி என்னும் வெப்பத்தை நீக்கும் மருந்தாக விளங்குகின்றது விபூதி. உள்ளத்தையெல்லாம் புனிதமடையச் செய்து நமது துன்பங்களை நீக்கி விடுகிறது. பாண்டியன் வெப்பு நோயை நீக்கியது. மாத்திரமல்ல அவனது மனதில் ஏற்பட்ட ஊனத்தையும்உடலில் ஏற்பட்ட கூன் நோயையும் நீக்கி நின்ற சீர் நெடுமாறனாக்கியது விபூதி.

> ஜீரணமடைந்த சாப்பாட்டையும், வயதான சுமங்கலிகளையும், போரில் வெற்றி அடைந்த வீரனையும், சபையில் பேசி வென்றவனையும், தர்மம் அறிந்தவனையும், யாகாதி புண்ணிய காரியம் செய்தவனையும், ஆஸ்திகர்களும், தெய்வபக்தி உள்ளவர்களும் தபஸ்விகளும் கொண்டாடுவார்கள்.

விபூதியின் பெருமையை நன்கறிந்தவர் தொண்டர்சீர்பரவுவாராகிய சேக்கிழார். சந்திரன் வானத்தில் நின்று நிலாவொளி வீசும் காட்சியைச் சேக்கிழார் கண்டார். நிலாவொளி குளிர்ச் சியானது. குற்றமற்றது. மற்றவர்களுக்கு இன்பத்தைக் கொடுக்க வல்லது. இந்த நிலாவின் தன்மைகளை நோக்கிய சேக்கிழார்க்கு விபூதியின் பிரகாசம் தான் நினைப்பிற்கு வருவது. விபூதியின் தெய்வீக ஒளி எங்கும் வீசும். பரந்திரத்தல் போல நிலாவொளியும் அண்டமெல்லாம் பரந்திருத்தலைக் காண்கின்றார். அவர் எண்ணம் பெரிய புராணத்தில் ஓர் சிறந்த செய்யுளாக வெளி வந்தது.

> விவேகமும், விபரமும், பக்தியும், உள்ளவனின் குற்றங்களை குரு போக்கிவிட முடியும். துஷ்டனுடைய குற்றங்களை அரசன் போக்கிவிட முடியும். இவ்விருவர்களின் குற்றங்களை எமன் போக்கி விடுவான். ஆனால் கணவனின் குற்றங் களை மனைவியின் கற்பே போக்கிவிடும்.

**'தோற்று மன்னுயிர்**<br>
**கட்கெலாந் தூய்மையே**<br>
**சாற்று மின்பமுந்**<br>
**தண்மையுந் தந்துபோய்**<br>
**ஆற்ற அண்டமெ லாம்பரந்**<br>
**தண்ணல் வெண்**<br>
**நீற்றின் பேரொளி**<br>
**போன்றது வெண்ணிலா'**

விபூதியின் மேலும் அடியார் மேலும் இடையறாப் பற்றுக் கொண்ட சேக்கிழார் நிலாவொளியில் விபூதியைக் கண்டார். விபூதியில் நிலாவொளியைக் காணும் அற்புதத்தையும் மற்றோர் இடத்தில் பார்ப்போம்.

ஞானசம்பந்தரை 'வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர் மதிக் கொழுந்தை' எனப் பாடினார். ஒரு சிறு குழந்தையை வளர்மதிக்கு

> வீட்டுக்கு வந்த ஒருவனுக்கு அவன் கேட்காமலே தாக சாந்திக்குத் தண்ணீர் கொடுப்பவனும், சோர்வுடன் வருபவர்களுக்கு ஓய்வு எடுக்கப் பாய் கொடுப்பவனும் தனக்குக் கஷ்ட மிருந்தும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் இனிமையாகப் பேசிச் சமாளிப்பவனும் பெரிய பூஜை செய்த பலனை அடைகிறார்கள்.

**நாநலன் என்னும் நலன் உடைமை அந்நலம்**<br>
**யாநலத்து உள்ளதூஉம் நன்று** **641**

நாநலம் என்னும் சொல்லப்படும் நலம் அமைச்சருக்கு ஒருவகைச் செல்வமாகும். அந்த நாநலம் வேறு எவ்வகை நற்பேறுகளுள்ளும் அடங்குவது அன்று. (தனிச்சிறப்புடையது)

ஒப்பிடுவது இயல்பாயினும் ஞானசம்பந்தரின் மேனியில் உத்தூளனமாகப் பூசப்பட்ட விபூதியின் ஒளியைக் கருதியும் சொல்லியிருக்கலாம். அதற்கு இதோ ஒரு சான்று.

பிராமணர்களைப் பூஜிப்பவன், ஜோதிடரைப் பேணுபவன் தேசாபிமானம் உள்ளவன், கல்வி அறிவு உள்ளவன், நல்ல நடத்தை உள்ளவன், தைரியம் உள்ளவன், தர்மம் செய்பவன் ஆகியவர்கள் உள்ள இடத்தில் பொன் விளையும். (ஜனங்கள் கஷ்டப்படமாட்டார்கள்.)

திருவரத்துரையை நோக்கி அடியாரோடு நடந்து சென்ற ஞானசம்பந்தர் வழியில் களைப்படைந்தார். 'மாலைக்காமும் வா மான் பாடி' என்னும் பதியில் தங்கினார். தன் குழந்தையின் துன்பம் பொறுக்க முடியாத இறைவன் திருவரத்துரையிலே உள்ள அடியார்களிடத்தில் அருள் செய்து முத்துச் சிவிகை, முத்துச் சின்னம் ஆக்கினார்.

அதர்மத்தாலும், அநியாயத்தாலும் சம்பாதித்த பொருளைத் தான தர்மம் செய்து அந்த தோஷத்தை மறைத்து விடலாம். ஆனால் அந்தத் தோஷங்கள் மறையாததோடு அதிலிருந்து புது தோஷங்கள் உருவாகும் என்பதை அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஞானசம்பந்தரும் இறையருளை உணர்ந்து அந்த முத்துச் சிவிகையில் ஐந்தெழுத்தோதி உலகம் உய்ய வேண்டும் என்னும் கருணையால் ஏறினார்.

தொண்டர் ஆரவாரித்தார்கள், தேவர்களும், ஆரவாரித்தனர். முத்துச் சின்னங்களும் ஆரவாரித்தன. ஞானசம்பந்தர் முத்துச் சிவிகையில் தொண்டர் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் சூழ ஞானசம்பந்தர் வரும் காட்சியை தம்மனக்கண் முன் கண்டார் சேக்கிழார்.

வெண்முத்துக்களால் ஆக்கப்பட்ட சிவிகை, அதைச் சுமந்து வருபவர்களும், பக்கத்தில் சூழ்ந்து வருபவர்களுமாகிய அடியார்களோ உடலெங்கும் வெண்ணீறு விபூதி அணிந்து பாற்கடலோ என்று சொல்லும்படி வருகிறார்கள். சிவிகையின் மேல் இருக்கும் ஞானசம்பந்தரோ தோற்றத்தாலும் விபூதிப்பூச்சாலும் வளரின மதியம் போன்று காட்சியளிக்கிறார். பாற் கடலில் வெண் சங்குகளின் தோற்றம் போல் விளங்குகின்றன. ஓர் இன்பமான காட்சியாக தம் மனக் காட்சியை செய்யுளாக்கி விடுகிறார்.

**'மல்கு வெண்கதிர்ப் பத்திசேர்**
**நித்திலச் சிவிகைப்**
**புல்கு நீற்றொளி யுடன் பொலி**
**புகலிகா வலனார்**
**அல்கு வெள்வளை யலைத்தெழுந்**
**மணிநிரைத் தாங்கம்**
**மல்கு பாற்கடல் வளர்மதி**
**யுதித்தென வந்தார்.**

இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்பது சைவம். நீறில்லா நெற்றிபாழ் என்றார் ஔவையார். 'திருநீறு பூசாத திருவில் ஊர்' என்பது அப்பர் வாக்கு. எனவே சைவர்களாகிய நாம் எமக்கு இன்பம் தரும் நீறு நம் நெற்றியில் எந்தநேரமும் விளங்கும்படி பாதுகாப்போமாக.

தனது கூர்மையான அறிவை வைத்து பயத்தை வராமல் காத்துக் கொள்ளலாம். ஆண்டவனை வழிபடுவதால் ஆபத்தைக் காத்துக் கொள்ளலாம். பூஜை செய்வதால் சிறந்த வஸ்துக்களை தாமதத்தில் பெறலாம். தியானம் செய்வதால் ஆன்மீக பலம் பெறலாம். எல்லாவற்றுக்கும் மேலாக மௌன விரதமிருந்தால் உலகையே ஜெயித்து விடலாம்

**ஆக்கமும் கேடும் அதனால் வருதலான்**
**காத்து ஓம்பல் சொல்லின்கண் சோர்வு** 642

அரசனுக்கு ஆக்கமும் அழிவும் தான் சொல்கின்ற சொல்லால் வரும். ஆகையால், அமைச்சன் தன் சொல்லில் தவறு நேராமல் போற்றிக் காக்க வேண்டும்.

# ஆலயங்கள் அமைக்கப்பட்டதன் நோக்கம் மனிதனின் தேவத்தன்மையை வெளிப்படுத்தலே

இலங்கை மெய்கண்டார் ஆதீன முதலாம் குருமுதல்வர்
ஞானப்பிரகாச தம்பிரான் சுவாமிகள்

ஆலயத்தை முன்னோர்கள் உண்டாக்கிய நோக்கம் மனிதனிலே மறைந்து கிடக்கும் தேவத்தன்மையையும், தெய்வத்தன்மையையும் வெளிப்படுத்தும் நோக்கமேயாகும். மனிதனுடைய உடம்பு பஞ்ச பூதங்களினால் ஆக்கப்பட்டது. அதன் செயல் முக்குணங்களைக் கொண்டு செயல்படுகின்றன. சாத்வீக குணத்தி லிருந்து தெய்வீகமான செயல்களையும், ராஷத குணத்திலிருந்து மனிதப் பண்புகளையும், தாமத குணத்திலிருந்து மாக்களினத்தையும் தோற்றுவிக்கின்றன. இச் சிறப்புக்களைச் சாத்திரங் களாலும் குருவருளாலும் அறிந்து மனிதன் கீழ் நிலையையடையாமல் வாழ வேண்டும். இதற்காகவே ஆலய வழிபாட்டு முறைகள் அமைந்துள்ளன. உடம்பையே ஆலயமாக அமைத்துக் காட்டுகிறார்கள் சமயக் குரவர்கள்.

**உடம்பெனும் மனையகத்துள்**
**உள்ளமே தகளியாக**
**மடம் படுமுயிர் நெய்யட்டி**
**உயிரெனும் திரிமயக்கி**
**இடம் படுஞானத்தீயால்**
**எரிகொள இருந்து நோக்கில்**
**கடம்பமர் காளைதாதை**
**கழலடி காணலாமே**

(தேவாரம்)

தாயுமான சுவாமிகளும், ஐவகையெனும் பூதமாதியை வகுத்து அதனுள் அசரசரபேதமான யாவையும் வகுத்து நல்லறிவையும் வகுத்து மறையாதி நூலையும் வகுத்து சைவ முதலாய அளவிற் சமயமும் வகுத்து மேற்சமயம் கடந்து மோன சமரசம் வகுத்தது நீ.

என்று கூறியுள்ளமையையும் காட்டி இன்னும் இப்படியாகப் பல ஆதாரங்களின் மூலம் உடம்பின் அமைப்பையே ஆலயமாக அமைத்துள்ளார்கள். சந்தான குருவருள் ஒருவரான அருநந்தி சிவாச்சாரியாரும் சித்தி பாரில் நவபெரும் பேதமாக நாடகம் நடிப்பன் என்று கூறியமையும் அதனால் இயற்கையும் உடம்பும் ஆலயமும் முறையே ஒன்பது விதமான வடிவங்களுமுண்டு என்று காட்டியுள்ளார்கள். அவையாவன பிரமா, விட்ணு, உருத்திரன், மகேஷன், சதாசிவம், விந்து, நாதம், சக்தி, சிவம் என ஒன்பதாகும். முறையே பிரம்மபதம் உள் வீதியென்றும், விட்ணுபதம் கொடிமரத்தடியென்றும், உருத்திரபதம் யாகம் வளர்க்குமிடம், மகேஷன் மாமண்டபம், தெற்கு வாசல் நேர் என்றும் சதாசிவபதம் கர்ப்பக்கிரகம் மூலத்தானம் என்றும், லிங்கத்தின் மேல் இருக்கும் துவாத சாந்தம்

ஒரு பந்தியில் பலர் உட்காரும் போது முன்னதாக சாப்பிடக் கூடாது. சாப்பிடலாம் என்று பெரியவர்கள் கூறிய பின்போ அல்லது அவர்கள் சாப்பிட ஆரம்பித்த பின்போ சாப்பிட வேண்டும். பெரியவர்கள் எதிரில் கால் மீது கால் போட்டுக் கொண்டோ தொடையை ஆட்டிக் கொண்டோ தாளம் போட்டுக் கொண்டோ சாப்பிடக்கூடாது.

**கேட்டார்ப் பிணிக்கும் தகைஅவாய்க் கேளாரும்**
**வேட்ப மொழிவதாம் சொல்** 643

நண்பராயிருந்து தாம் சொன்னதை ஏற்றுக் கொண்டவர் பின்பு தம்மை விட்டுப் பிரியாதவாறு, தன்வசப்படுத்தும் தன்மைகளை விரும்பித் தழுவி, பகைவராய் இருந்து தம் சொல்லை ஏற்றுக் கொள்ளாதவரும் பின்பு அப்பகைமையை நீங்கி நட்பை விரும்பும்படி சொல்வதே அமைச்சருக்குரிய சொல்முறையாம்.

பெருவெளி விந்து நாதமென்றும், விமானமுடியே சக்தி சிவமென்றும் அமைத்து வழிபட்டு வருகிறார்கள். இதைப்போல உடம்பிலும் ஒன்பது இடமுண்டு. இயற்கையிலும் ஒன்பது இடமுண்டு. இவற்றை தத்துவ சாத்திரத்தால் விளக்கமாக அறியலாம். உடம்பும், ஆலயமும் 36 தத்துவத்தால் அமையும். அவற்றுள் ஆன்ம தத்துவம் 24. வித்தியா தத்துவம் 7. சிவதத்துவம் 5 ஆகும். இதில் சிவதத்துவம் சிவனிருக்குமிடம் வித்தியா தத்துவம் குருவுக்கும் பூசகருக்குமுரிய இடம். ஆன்ம தத்துவம் வழிபடுவோருக்குரிய இடம். இதில் வழிபாடியற்றும் முறையாவது மந்திரத்தாலும், பதத்தாலும், (கோத்திரத்தாலும்) வர்ணத்தாலும் (இசையாலும்) மந்திரம் வியாபக நிலைமையுடையது. அதனால் அது தெய்வபத மாகும். பதமாவது பன்னிரு திருமுறைகள். இவை மனித பதம் பக்திக்குரியது. வர்ணம் இசையுடன் கூடியது. சாம வேதம் லயமுடையது. மந்திரமே வேதம் ஆகமம் கோவில் அமைக்கும் முறையும் கோவில் கிரியாபாகமும் ஆகம முறைப்படி நடப்பவையாகும். கோவில் அமைப்பது யந்திர ஸ்தாபனம் செய்யும் போது தந்திர முறைப்படி என்பது ஆகம முறைப்படி மந்திரத்தை மூலத்தான யந்திரத்தில் பிரதிஷ்டை செய்வது. இறைவனை நாத வடிவில் நிற்கச் செய்வது. நின்று சாநித்திய ஓராய் நின்று அருள்புரிவதாகும். இது இறைவனைப் பிரதிஷ்டை செய்யும் முறையாகும். திருவிழாக் காலங்களில் இறைவனை மந்திர வடிவில் ஆசாரியர் அபிஷேக நேரம் கும்பத்திலும் பூசை வேளை விம்பத்திலும் கொடி மரத்திலும் அழைத்து வழிபடுவோருக்கு அனுக்கிரகம் பண்ணும்படி செய்வதாகும். இவற்றை மந்திரங்கள் செய்யுமே யொழிய பதங்களான திருமுறைகள் செய்ய மாட்டா. அப்படிச் செய்யவும் சாத்திரங்களில் கூறப்படவுமில்லை. வலிந்து கொள்வது பாபச் செயலாகும். மந்திரம் மின்சாரம் போன்றது. திறமையான ஆசாரியனால் கும்பம் நிறுவினால் கும்பத்தை அசைக்கவோ, எடுக்கவோ, முடியாது. இதை நிரூபித்தும் காட்டினார்கள். இன்றுள்ளோரால் காட்டமுடியவில்லை. அதனால் ஒரு சிலர் உண்மைகளை நம்புகினமில்லை.

> சாப்பிட்டவுடன் உட்காருவதால் வயிறு உபாதையும், வேகமாய் நடந்தாலும் ஓடினாலும், தூங்கினாலும் சத்ரு பயம் ஏற்படுகிறது. சாப்பிட்டவுடன் மெதுவாக எழுந்து நின்று மெதுவாக சிறிது நடந்த பின்பு உட்கார்ந்தால் ஆயுள் விருத்தி ஆகிறது.

> ஒருவன் தன் அறிந்தும், அறியாமலும், செய்த பாவங்களைப் போக்க இஷ்டமந்திர ஜெபம் அல்லது காயத்திரி ஜெபம் முடியுமட்டும் செய்ய வேண்டியது. ஜெபம் செய்யும்போது வேறு சிந்தனைகளுக்கு இடம் கொடுக்கக்கூடாது.

பூசையின் சிறப்பையும், ஆசாரியர் ஒழுக்கத்தையும் வாதவூர்ப் புராணத்தில் கடவுள் மாமுனிவர் கூறுகின்றார்கள். கந்தவர்க்கமும் கிளர் மனப்புகையும் கவின் கொள் தீபமும் புனித மஞ்சனமும் கொந்தவிழ் மலருங்கொண்டு ஐந்து சுத்தி செய்து அகம் புறம் இறைஞ்சி அங்கியின் கடன் முடித்து அருள் வழி நின்று இந்த நற்கிரியை செய்வோர் ஆசாரியாவர் என்கிறார்கள்.

கோவில் வழிபாட்டில் வரும் பயனென்ன என்பது பெரிய கேள்வியாகும். கோவிலில் சரியைத்தொண்டு செய்வதால் உடல் பிணி மாறும். உடல் உறுதியாக எப்பவும் இருக்கும். சரியைத் தொண்டு எவை என்று அப்பர் சுவாமிகள் "நிலைபெறுமாறெண்ணுதியேல் நெஞ்சே நீ வா நித்தலும் எம்பிரானுடைய

> **திறன்அறிந்து சொல்லுக சொல்லை அறனும்**
> **பொருளும் அதனின்ஊஉங்கு இல்** 644
>
> (அத்தகைய) சொல்லை, கேட்போர் நிலைமையும் செய்தியின் தன்மையும் அறிந்து அவைகளுக்கு ஏற்றவாறு சொல்ல வேண்டும். அவ்வாறு சொல்வதை விடச் சிறந்த அறமும் பொருளும் இல்லை.

கோயில் புக்கு புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டு பூமாலை புனைந்து ஏற்றி புகழ் பாடித் தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி" எனத் தன் அனுபவத்தைக் கூறியுள்ளார்கள்.

காது, தொக்கு, கண், நாக்கு, மூக்கு ஆக ஐந்து ஞானேந்திரியம், ஆசனம், உபஸ்தம், கை, கால், சொல் ஆக இவ் ஐந்தும் கர்மேந்திரியம் தன் இஷ்டப்படி மேற்படி பத்தையும், இயக்குகிற மனம் பதினொன்றாவது இந்திரியம். அதை ஜெபித்தால் எல்லா இந்திரியங்களையும் ஜெயிக்கலாம். மனம் நல்ல வழியில் செல்ல இந்த இந்திரியங்கள் ஒருவனுக்கு உதவுகிறது.

கிரியைத் தொண்டாவது தன் பொருட்டு சிவபூசை செய்தல். எல்லார் பொருட்டும் பரார்த்த பூசை முதலியன செய்தல். இதனால் மனப்பிணி முதலியன கஷ்டங்கள் நீங்கும். மனிதனுக்கு எல்லா வித நலனுமுண்டு. எனவே தான் ஆன்றோர்களும் அரசர்களும் ஆலயமமைத்து நாட்டையும் மக்களையும் எக்குறைவும் வராமல் காத்து வந்துள்ளார்கள். அரச நீதி செங்கோல் கோணாமல் நடைபெற்றதால் மாதம் மும்மாரி பெய்தது. அதனால் நாட்டு வளப்பம் வேளாண்மை யாவும் பூத்துக் குலுங்கின. சைவநீதி வழங்கியதால் வான் முகில் குறையாது வழங்கின. அன்றுளோர் ஆலயத்தில் இறைவன் இருப்பதாய் நம்பினார்கள். எக்குறைவரினும் இறைவனிடமே முறையிட்டார்கள். இக்காலம் ஆலயத்திலே நம்பிக்கை வைக்குமளவுக்கு பாடசாலைக் கல்வியும், சமூக அமைப்பும் அமையாமையே காரணம். பாடசாலையில் சமயமில்லாத போதனைகள் கற்பிக்கப்படுவதால் மாணவர் சமூகம் ஆலய வழிபாட்டில் நம்பிக்கை வைக்கவில்லை. பெற்றோரும் அதுபற்றிக் கவனம் எடுக்கவில்லை. எனவே ஆலய விழாக்களுக்கு மாணவ மாணவிகள் போவதில்லை. வேடிக்கை ஏதுமிருந்தால் போவார்கள். அது அவர்களில் குற்றம் சொல்ல இடமில்லை. கல்வி முறையும் சமூக வளர்ச்சியும் திருந்த வேண்டும். வள்ளுவப் பெருந்தகையின் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும் என்ற மூதுரை வாழ்க்கையில் செயல்பட வில்லை. ஆலயத்தை அமைத்துப் பூசை முறைகளை உண்டாக்கியவர்கள் சாதாரண மனிதர்களல்ல. அவர்கள் ஞானபரம்பரையினர். அகக்கண் கொண்டாராய்ந்தவர்கள். அவனருளாலே அவன் தாள் வணங்கியவர்கள். அவனருளாலே கண்ணாகக் கண்டவர்கள். அநித்தியத்தைத் தள்ளி நித்தியப் பொருளை நிலைபெற வைத்தவர்கள் அவர்கள். சொல்லிலும் செயலிலும் பொருள் நிறைந்துள்ளது.

அன்றுள்ள ஆசாரிய பரம்பரையினர் விஷேச தீட்சையும் நிர்வாண தீட்சையும் பெற்றவர்கள். அறு தொழிலாளர் பார்ப்பவர் ஓதல் ஓதுவித்தல் வேட்டல், வேட்பித்தல் ஈதல், ஏற்றல் என ஆறு காரியமுடையவர். நித்தியமும் சிவபூசையும் அக்கினி காரியமும் முடியாமல் உணவு கொள்ளமாட்டார்கள். அவர்களுடைய வாயில் மந்திரம் எப்படி என்பதை நந்தனார் வேதமொழி விளங்கிவரும் திருவாயால் விடை கொடுக்க வேண்டுமென்று கேட்டதால் அந்தணர் சிறப்பு விளங்குகிறது. பிராமணர் என்றால் பிரமத்தை உணர்ந்தவர்கள் என்றும் அந்தணர் என்றால்

நாஸ்திகவாதி, திருடன், காமந்தகாரகன், திருடன், பித்தலாட்டக்காரன், இவர்களுடன் ஒரு நல்லவன் வசித்து வந்தால் அவர்கள் குணமும் இவனுக்கு வந்து விடும். பனை மரத்து நிழலில் இருந்து பால் குடித்தாலும் அதைப் பார்ப்பவர்கள் 'கள்' என்று தான் சொல்வார்கள். ஒரு துணியை எந்த சாயத்தில் முக்குகிறோமோ அதே சாயம் பதிவது போல துஷ்டனின் குணம் எப்படியும் சேர்பவர்களுக்கு வந்து விடும். கெட்டவனைத் தொட்டான் தொட்டவனும் கெட்டான்' என்பதே நிலைமை ஆகி விடும்.

**சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை**
**வெல்லும்சொல் இன்மை அறிந்து** **645**

தாம் சொல்லக் கருதிய சொல்லை வெல்லக்கூடிய வேறொரு சொல் இல்லாமையை அறிந்து, பின்பு அச்சொல்லைச் சொல்ல வேண்டும்.

செந்தண்மையுடையவர் என்றும் வேதியர் என்றால் நித்தமும் மூத்தீ வளர்ப்பவர் என்றும் சிறப்புகள் கூறப்பட்டுள்ளன. பூசுரர் என்றால் எப்போதும் பூசிக்கத் தக்கவர்கள் என்பதாகும். இன்று இவை குறுகி வருவதற்குப் பல காரணங்க ளுண்டு. ஆலயம் சிறப்புற வேண்டுமெனில் அந்தணர்க் கருங்கலம் நான் மறை ஆறங்கம் என்பது சிறக்க வேண்டும். மக்களுக்குச் சமயம் முதல் சமயத்துக்கு ஆலயம் முதல் ஆலயமில்லாத ஊரில் சைவசமயி குடியிருக்கக் கூடாது என்பது ஆன்றோர் வாக்கு.

**திருக்கோவில் இல்லாத**
**திருவிலூரும்**
**திருவெண்ணீறணியாத**
**திருவிலூரும்**
**பருக்கோடிப் பக்திமையாற்**
**பாடாவூரும்**
**பாங்கினொடு பல**
**தமிழிசை இல்லாவூரும்**
**விருப்போடு வெண்சங்க**
**மூதாவூரும்**
**விதானமும் வெண்**
**கொடியுமில்லாவூரும்**
**அருப்போடு மலர்**
**பறித்திட்டுண்ணாவூரும்**
**அவையெல்லாம் ஊரல்ல**
**அடவீ காடே**

(அப்பர் தேவாரம்)

மரங்களும், செடிகளும் அசுத்தமான இடங்களில் வளர்ந்தாலும் அதில் விளையும் காய், கனிகளை உண்பது தோஷம் ஆகாது.

திடீரென்று கோபம் அடைந்து தூஷிப்பவனைப் பதிலுக்குத் தூஷிக்கக் கூடாது. இவனது பொறுமைக் குணமும், சகிப்புத் தன்மையும் மௌனமுமே அவனுக்கு நல்ல பாடம் புகட்டி விடும். அவனது புண்ணியத்தில் பெரும் பகுதியையும் இவன் அடைந்து விடுவான்.

அக்கால மன்னர்கள் அரண்மனை கட்டாமல் ஆலயம் கட்டினார்கள். அது மெஞ்ஞான வளர்ச்சியான காலம், இக்காலம் மக்கள் ஆலயம் கட்டாமல் அரண்மனை போல வீடு கட்டும் காலம் இது. விஞ்ஞானிகளுடைய சமயமில்லாத உள்ளதன் படைப்பு விஞ்ஞானம்-வெளி வாழ்வு மெஞ்ஞானம் - அக வாழ்வு தெய்வ வாழ்வு - இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை தரும் வாழ்வு அக்கால மக்கள் மெஞ்ஞான வாழ்வில் நோயின்றி வாழ்ந்தார்கள். இன்று விஞ்ஞான வாழ்வில் நோயின்றி வாழ முடியவில்லை. போலி வாழ்வின் முடிவு நோய் தானே. இன்று வளர்ந்திருப்பது பெரிய பெரிய கட்டிடமாக் வைத்திய நிலையமே. ஆலயம் கட்டாமல் ஆஸ்பத்திரி கட்டுகிற காலம் நிம்மதியை விரும்பாமல் நோயை விரும்பி வேண்டுங்காலம். முடிவில் எந்த விஞ்ஞானியும் தெய்வத்திடமே நிறைவு காணுகின்றனர். விஞ்ஞானம் நிலைபெற்று நிற்கப்போவதில்லை. மெஞ்ஞானமோ முக்காலமும் நிலை பெற்று நிற்பனவாகும். அளப்பரும் சமயமான சைவ சமயத்தை மூவேந்தர்கள் பேணி வளர்த்து வைத்தார்கள். காலத்தால் சில இன்னல் நேருங்காலம் அவ்வப்போது தோன்றிய சைவப் பெரியார்களால் பாதுகாப்பளிக்கப்பட்டது. பிற்காலம் நாவலர் பெருமான் தோன்றினார்கள். அதன் பின்னும் பல சைவப் பெரியார்கள் தோன்றி பாதுகாத்து வந்த சைவசமயம் இன்று அனாதரவாக இருப்பது வியப்பல்ல. மக்கள்

**வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்**
**மாட்சியின் மாசற்றார் கோள்** **646**

தாம் பிறருக்கு ஒன்றைச் சொல்லும் போது, அவர் மேலும் கேட்க விரும்புமாறு இனிதாகவும் தெளிவாகவும் சொல்லி, பிறர் சொல்லை தாம் கேட்கும் போது மட்டும் அதில் இனிமையும் தெளிவும் இல்லாதிருப்பினும் அதன் பொருளை உள்ளவாறு அறிந்து சொள்ளுதல் குற்றமற்ற சிறப்புடைய அமைச்சரின் இயல்பாம்.

விஞ்ஞான நாகரிகத்தில் முற்றாய் மூழ்கி விட்டார்கள். அப்படி மாறுவது அதர்மமாகும். எப்படிக் காலம் மாறினும் சமயநிலை மாற்றமடை வதில்லை. எனவே இருபத்தைந்து லட்சம் மக்கள் வரை இருக்கிறார்கள். சைவசமயிகள் இருந்தும் சமயத்திற்கு ஒரு தலைமைப்பீடம மைத்து சமய பரிபாலனம் செய்யுமளவுக்கு சமய மக்கள் தகுதியற்றிருப்பது பற்றிச் சைவசமய மக்கள் சிந்திக்க வேண்டுமென்ப தேயாகும்.

இலையில் உள்ள பதார்த்தத்தைக் கொஞ்சமாவது மீதி வைத்து தான் சாப்பிட்டு முடிக்க வேண்டுமே தவிர இலையைத் தொடைத்துச் சாப்பிடுவதும் விரலில் ஒட்டிக் கொண்டுள்ள பதார்த்தத்தை நக்கி நக்கி சாப்பிடுவதும் தரித்திரத்தை வளர்க்கும். ஆகையால் மேற்கண்ட பழக்கங்களைக் கை விட வேண்டும். தன் மனைவி இஷ்டப்படி புசித்துக் கொண்டு இருக்கும் பொழுது இமை கொட்டாமல் பார்ப்பதும், அவளை ருசித்துச் சாப்பிட விடாதபடி பேசுவதும் கூடாது. கர்ப்பமான மனைவி உணவு உண்ணும் பொழுது கோபித்தால் புஷ்டியில்லாத குழந்தை பிறக்கும்

சமயத்தின் பேரால் பலசமய ஸ்தாபனங்க ளிருக்கின்றன. சமய அறிவாளிகளான பண்டிதர், புலவர், வித்துவான்களும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். இருந்தும் அவர்களுடைய அறிவாற்றலை சமய ஸ்தாபனங்கள் பயன்படுத்த வில்லை. அவர்களுக்குச் சமய ஸ்தாபனங்கள் உயர்ந்த பதவியையும் கொடுப்பதில்லை. சமயம் குன்றி வருவதற்கு மூலகாரணம் படித்தவர்களை மதிக்காமையேயாகும். கற்றவர்களுடைய மனம் நொந்தால் நாடு செழிப்படையாது என்பது முதுமொழியாகும். கற்றவர்களை முன்வைத்து சமயத்தையும் சமூகத்தையும் வளர்க்க வேண்டும். சமயத்துக்கும் சமூகத்துக்கும் மையமாயிருப்பது தான் ஆலயம். திருமூலர் வாக்கு முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடில் மன்னர்க்குத் தீங்குற வாரிவளம் குன்றும் என்றும் ஆற்றாற் நோய் மிகும் அவனியில் மழை போற்றரு மன்னரும் போர் வலி குன்றுவர் கூற்றுதைத் தான் திருக்கோயில்கள் ஆவன சாற்றிய பூசைகள் தப்பிடித்தானே என்ற உண்மைகளையும் நாம் உணர்ந்து நடக்க வேண்டும். இந்நிலைமைகளையுணர்ந்த பெரியோர்களிற் சிலரே ஆலயங்களைப் புதுப்பித்து வேதாகம முறைப்படி தகுந்த ஆசாரிகளைக் கொண்டு கும்பாபிஷேகம் செய்து மக்களையும் நாட்டையும் சிறப்படையச் செய்ய முன் வந்துள்ளார்கள். அவர்களுக்கு இறைவன் தோன்றாத் துணையாக இருந்து நீடிய ஆயுளையும் நிறைந்த செல்வத்தையும் அமைத்து இம்மை யிலும் மறுமையிலும் இறைவனுடைய திருவடியை மறவாது வாழ்ந்து முத்திப் பேற்றையடையக் கடவர்.

ஒருவன் தான் எப்படிப்பட்டவனோடு சேர்கிறானோ, எவனுடன் சேர்ந்து வேலை செய்கிறானோ, தான் எப்படி இருக்க வேண்டுமென்று இருக்க விரும்புகிறானோ அப்படி ஆவதற்கு உழைப்பும், தன்னம்பிக்கையும், நாணயமும் தேவை. இதுவே இவனை உயர்ந்த நிலையில் வைக்கும். நல்லது சொல்கிறவனை முதலில் நம்பியே காரியத்தை ஆரம்பிக்க வேண்டும். ஒருவனை நம்பாமல் இருந்தால் நல்லவர்களின் உதவியே கிடைக்காமல் போய்விடும்.

**சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை**
**இகல்வெல்லல் யார்க்கும் அரிது** 647

தான் சொல்லக் கருதியவற்றைப் பிறர்க்கு ஏற்பச் சொல்லுதல் வல்லவனாய், எதையும் மறந்து விட்டு விடாதவனாய், அவைக்கு அஞ்சாதவனாய் இருப்பவனை மாறுபாட்டில் வெல்லுதல் எவருக்கும் அரியதாம்.

# சமய வழிபாட்டில் காவடி ஆட்டம்

இராதாக்கிருஷ்ணன்
B.A. DIP. IN EDU
ஆசிரிய ஆலோசகர்

கிராமியக் கலைகளிலே காவடி ஆட்டமும் ஒன்றாகக் கொள்ளப்படுகிறது. தமிழர்களின் பாரம்பரிய கலை மரபுகளில் காவடியும் உள்ளடக்கப்படுகின்றது. வாழ்க்கையை மென்மையாக்கி மனித குணங்களைப் பூரணமாக்குபவை கலைகளாகும். கலைகளின் உணர்ச்சி வடிவம் தான் ஆன்மாவாகும். இடையறாது பாடுபட்டு பிறர் வாழ்வுக்காக உழைத்திடும் கிராமிய மக்களின் இறைவழிபாட்டில் காவடிக் கலையும் ஒன்றிணைந்துள்ளது. ஆரம்ப காலத்தில் ஆகமம் சாராத வழிபாட்டு முறையாக வளர்ச்சி கண்ட காவடிக் கலையானது இன்று ஆகமம் சார்ந்த வழிபாட்டு முறைகளுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. காவடி ஆட்டம் முருக வழிபாட்டுடன் தொடர்புடையது. காவடி ஆட்டத்தின் தோற்றத்தை நோக்கின், முருகப் பெருமான் இடும்பனைப் போன்று காவடி எடுத்துத் தன் சந்நிதிக்கு வருபவர்களுக்கெல்லாம் அருள் பாலிப்பதாக வாக்களித்தார். அன்று முதல் ஆலயங்களில் காவடியாட்டம் தோற்றம் பெற்றது. எனவே இடும்பன் கதையுடன் காவடியாட்டத்தின் தோற்றம் தொடர்புடையது. (கைலாசத்தில் காணப்பட்ட சிவகிரி, சத்தகிரி என்னும் மலைகளைப் பொதிய மலையில் இருந்த அகத்திய முனிவரிடம் சேர்க்கும்படி இடும்பாசுரனுக்குச் சிவபெருமான் ஆணையிட்டார் எனவும், அதற்கமைய அவன் இம் மலைகைளக் காவடி போலக் கட்டித் தூக்கிக் கொண்டு பொதிய மலையை நோக்கிச் சென்றான் என்றும் களைப்பின் நிமித்தம் சுமந்து சென்ற மலைகளைப் பழநியில் இறக்கி வைத்து முருகனின் வாயில் காவலனாக இருக்க வரம் வேண்டி முருகனது வாயில் காவலனாகினான் என்றும் ஐதீகம் தென்னிந்திய இந்துக்களிடையே நிலவுகின்றது.

குறிஞ்சிக் கடவுளாகிய முருகப் பெருமான் மலைமீது அமர்ந்து ஞான அருளாட்சி புரிகின்றான். பண்டைய தமிழர்கள் மலைமேலுள்ள அவனது வழிபாட்டிடங்களுக்குக் காணிக்கைப் பொருட்களைக் காவிக் கொண்டு சென்று தம் வழிபாட்டினை மேற்கொண்டனர். காணிக்கைப் பொருட்களைச் சிறு சிறு பாத்திரங்களில் இட்டு மரத்தண்டின் இருமுனைகளிலும் கட்டி மரத்தண்டினைத் தோளின் மீது வைத்துச் சுமந்து சென்றனர். இவ்விதமாக மேற்கொள்ளப்பட்டு வந்த வழக்க முறையும் காவடியாட்டம் தோற்றம் பெற வழி சமைத்தது. காவடி வடிவத்தின் தோற்றம் பற்றி இன்னொரு கருத்தும் நிலவி வருவதும் நோக்கத்தக்கது. அன்னக் காவடி எடுக்கப்படும். வடிவம் இதன் முன்னோடியாகக் குறிப்பிடப் படுகிறது. கிராமப்புறங்களில் சந்நியாசிகள் தமக்குரிய உணவுகளைக் கிராமிய மக்களிடம் சேகரித்துக் கொண்டு செல்வதற்கு இத்தகைய

நாம் தினசரி சாப்பிடுகின்ற அன்னமானது விஷ்ணு சொரூபமாகையால், அதை குறை சொல்லாமல் புகழ்ந்து கொண்டே சாப்பிட வேண்டியது. சில வீடுகளில் சாப்பிடும் போதுதான் விவகாரம் வந்தால் அன்ன வஸ்திர பஞ்சம் ஏற்படக் காரணம் உள்ளதால் இதை அனுசரிப்பது நல்லது.

**விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்துஇனிது**
**சொல்லுதல் வல்லார்ப் பெறின்** 648

சொல்ல வேண்டிய செய்திகளை ஒழுங்காக வரிசைப்படுத்தி இனிதாக சொல்லவல்லரை பெற்றால், உலகம் விரைந்து அவர் ஏவல் கேட்டு நடக்கும்.

தடிகளைப் பயன் படுத்தினர். இதுவே காவடியாகத் தோற்றம் கண்டது எனவும் கருதப்படுகின்றது.
காவு + தடி = காவடியாகப் பொருள் கொள்ளப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

காவடியானது இசையும், நடனமும் இணைந்த ஓர் அழகிய கலை வடிவமாகும். காவடி ஓர் குறுந்தடியில் அதன் இரு முனைகளையும் இணைத்து மேல்நோக்கி வளைந்த அமைப்பில் கட்டப்பட்டிருக்கும். அதன் இரு மருங்கிலும் அமைந்த நான்கு மூலைகளையும் மயிற் பீலிகளால் ஒன்றிணைத்து ஒப்பனை செய்யப்படும். காவடியின் நடுப்பகுதியில் ஒரு வேல் மேல் நோக்கிய வண்ணம் அமைக்கப்படும். மலர் மாலை, துணி அலங்காரம் இவற்றுடன் முருகனின் படமும் ஒட்டப்பட்டிருக்கும். இவ்விதமாக அமைக்கப்படும் காவடி பல வகைகளாகவுள்ளது. பறவைக் காவடி, பால் காவடி, தூக்குக் காவடி, துலாக் காவடி, முள் காவடி, புஷ்பக் காவடி, சர்ப்பக் காவடி, சந்தனக் காவடி எனப் பல வகைப்படும்.

காவடியின் தத்துவ விளக்கத்தினை நோக்கின் காவடியிலுள்ள மயிற்றோகைகள் பிரணவமாகிய ஓங்காரத்தைக் குறிக்கின்றன. காவடியிலுள்ள வேல் ஆழ்ந்து அகன்று நுண்ணியதான கடவுள் கொள்கையினைச் சுற்றி நிற்கின்றது. தீயோர்களை அழித்து நல்வர்களைக் காப்பாற்றும் இறைச் செயலினைக் குறிக்கின்றது. காவடியில் கட்டியிருக்கும் மயிலிறகுகள் ஆணவம் அழியாது வலிமை குன்றி மலபரி பாகப்பட்டிருக்கும் தன்மையைக் குறிக்கின்றது. சூரபத்மன் முருகப் பெருமானின் ஞானவேல் பட்டு மயிலாகியமை ஆணவம் அழியாது வலிமை குன்றி நிற்கும் என்பதனைச் சுற்றி நிற்பது. குறிப்பிடத்தக்கது. காவடி எடுப்பவர்கள் சித்தாந்தம் கூறும் ஆன்மாவாகக் கொள்ளப் படுகின்றனர். ஆன்மாவானது மும்மலங்க ளிலிருந்தும் விடு பட்டு ஆன்மீக விடுதலையை

> ஆயுளை விரும்புகின்றவன் கிழக்குமுகமாக உட்கார்ந்து கொண்டும், கீர்த்தியை விரும்புகிறவன் தெற்கு முகமாக உட்கார்ந்து கொண்டும், சம்பத்தை விரும்புகிறவன் மேற்கு முகமாக உட்கார்ந்து கொண்டும் சத்தியத்தை விரும்புகிறவன் வடக்கு முகமாக உட்கார்ந்து கொண்டும் சாப்பிட வேண்டியது, சாப்பிடும் போது அதிகமாகப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.

நாடி நிற்பதனையும் உணர்த்துகின்றது. காவடி வழிபாட்டு முறையானது காவடி ஆடுபவர் பக்தியுடன் தன்னைத் தானே துன்புறுத்தி ஆன்மீக விடுதலையைப் பெறல் வேண்டும் என்பதனையும் எடுத்துக் காட்டுகின்றது.

பக்தர்கள் காவடி எடுப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. உண்மையான திடமான கடவுள் நம்பிக்கையை வெளிப்படுத்தவும், கடவுள் மீது கொண்ட அதிதீரமான பக்தியின் வெளிப்பாடாகவும், நன்றியுணர்வினைப் புலப்படுத்தவும், நேர் கடன்களை நிறைவு செய்வதற்காகவும் காவடி எடுக்கின்றனர். நேர் கடன் என நோக்கும் பொழுது நோய் நீக்கம் பெறுவதற்கும், பேராபத்துக்களிலிருந்து உயிர் பிழைத்துக் கொண்டமைக்காகவும், கொடிய நோய்கள் அகன்றமைக்காகவும் மரண அச்சத்திலிருந்து விடுபட்டமைக்காகவும் தெய்வங்களுக்கு நன்றி செலுத்தித் தமது திடமான விசுவாசத்தை வெளிப்படுத்தும் நோக்குடன் மேற் கொள்வர். பண்டைய காலங்களில் போரில் வெற்றி பெற்றமைக்காகவும் காவடி எடுத்தனர்.

> பேராசையானது அநுபோகத்தினால் அடங்குவதுகிடையாது. அது அக்னியில் ஊற்றிய நெய் போல் வளரும். ஆகையால் பேராசையை அறவே மனதில் இருந்து ஒழிக்க வேண்டும்.

> பலசொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற
> சிலசொல்லல் தேற்றா தவர் 649
>
> தாம் சொல்லக் கருதியவற்றைக் குற்றமில்லாத சில சொற்களால் தெளிகாவவும் சுருக்கமாகவும் சொல்லத் தெரியாதவர், உறுதியாக வீணான பல சொற்களை விரித்துக் கூற விரும்புவர்.

காவடி எடுப்பவர் விரதமிருத்தலுடன் ஆசாரத்தன்மையுடனும் விளங்குவார். அவரைச் சார்ந்த குடும்பத்தினரும் விரத அனுட்டானங்களையும், ஆசார விதிமுறை களையும் கடைப்பிடிப்பர். காவடி எடுப்பவர் வேட்டி அணிந்து தீருநீற்றினைப் பூசி செதில்கள் குற்றியும் இருப்பர். சிறப்பான அலங்கார வேலைப்பாடுடைய மரத் தண்டினைக் காவடி ஆடுபவர் தோளின் மேல் வைத்துக் கீழே விழாதவாறு ஆட ஆரம்பிப்பார். படிப்படியாக பக்திப் பரவசம் ஏற்படுகின்ற நிலையில் ஆடுபவர் தனது முதுகு வழியாகவும் மடக்கிய கைகள் வழியாகவும் பின்னர் அங்கிருந்து மெல்ல மெல்லத் தலைக்குக் காவடியை அசைப்பர். காவடித் தண்டானது நெற்றி வழியே கொண்டு செல்லப்பட்டு நெஞ்சுப் பகுதிக்கு ஊடாகக் கொண்டு சென்று வயிற்றின் மேல் நிறுத்தி ஆடுவர். இவ்வாறு ஆடுகின்ற வேளையில் இக் கலை தெய்வீக சக்தி வாய்ந்ததாகக் கருதப்படுவதோடு ஆடும் ஆட்டக் காரனும் அத் தன்மையுடையவனாகக் கணிக்கப்படு கின்றான். ஆரம்ப காலத்தில் காவடி ஆடும் போது உருமி மேளம், உடுக்குப் போன்ற இசைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. தற்பொழுது தவில்கள் நாதஸ்வரங்கள்,தாளங்கள் காவடியாட்டத்தின் போது பயன் படுத்தப்பட்டு வருகின்றன. இசைக்கருவிகளோடு காவடிச் சிந்து பாடுவதற்கு ஒருவர் துணையிருப்பர்.

ஈழ நாட்டில் முருக ஆலயங்களில் மட்டுமன்றி சிவன், சக்தி, பிள்ளையார், ஐயனார், விஷ்ணு, வைரவர், ஆலயங்களிலும் சிறப்பாகக் காவடியாட்டம் இடம் பெறுகின்றது. செல்வச் சந்நிதி முருகனைக் காவடிக் கந்தன் எனச் சிறப்பித்தழைப்பர். அவ்வளவு துாரத்துக்குக் காவடியாட்டம் இவ்வாலயத்தில் பக்தர்களால் பய பக்தியுடன் மேற் கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. மேலும் கதிர்காமம், மண்டூர் நல்லூர், மாவிட்டபுரம், மாதகல்நுணசை முருகன் போன்ற முருக தலங்களும் காவடியுடன் தொடர்பு பட்டு உள்ளன. இவ்வாலயங்களில் குறிப்பாக மகோற்சவ காலங்களில் பய பக்தியுடன் மக்களால் காவடி ஆட்டங்கள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. கடல் கடந்த நாடுகளான மலேசியா, சிங்கப்பூர், சுபத்ரா, தென்னாபிரிக்கா, போன்ற நாடுகளிலும், இந்தியாவிலும், காவடியாட்ட வழிபாட்டு முறைகள் சிறப்பாக இடம் பெற்று வருகின்றன. தைப்பூச விழாவில் சைவர்களின் வழிபாட்டில் காவடியாட்டம் சிறப்பிடம் வகிப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

கிராமிய வழிபாட்டுடன் இணைந்த காவடியாட்டக் கலையானது ஆரம்ப காலத்தில் ஆகம நெறி சாராத வழிபாடாக வழக்கத்தில் காணப்பட்டது. பிற்காலத்தில் ஆகம நெறி சார்ந்த வழிபாடுகளுடன் இணைந்து இன்று வரை ஆலயங்களில் பக்திபூர்வமாக ஓர் வழிபாட்டு அம்சமாக மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. இக் கலை அழியாது மேன்மேலும் மெருகுடன் பக்திபூர்வமாக அடியார்களால் பின்பற்றப்பட்டு வருவதற்குச் சைவர்களாகிய நாம் இக்கலையைப் பேணி வளர்ப்பது தலையாய கடனாகும். எனக் கூறுவது மிகையாகாது.

உணவைப் பூசித்து உண்டால் தைரியமும் பலமும் ஏற்படுகின்றது. நிந்தித்தால் இவ்விரண்டும் அழிகின்றது. எச்சில்பட்ட உணவை ஒருவருக்கும் கொடுக்கக் கூடாது. உண்ணும் பொழுது பாதியில் எழுந்தால் பின் உண்ணலாகாது. வயிறை அரைப்பாங்கு உணவாலும், கால் பங்குஜலத்தாலும் நிரப்பி, மிதி கால் பங்கை காற்று செல்வதற்கு வழிவகுக்க வேண்டியது. 50 வயதுக்கு மேல் இரவில் பால் பழம் மட்டும் சாப்பிட வேண்டியது. இதனால் ஆயுள் விருத்தி அடையும்.

**இணர்ஊழ்த்தும் நாறா மலரனையர் கற்றது**
**உணர விரித்துரையா தார்** 650

தாம் கற்ற நூற்பொருளை பிறர் தெளிவாக உணரும்படி விளக்கிச் சொல்ல முடியாதவர், கொத்தாக மலர்ந்திருந்தும் மணம் கமழாத பூவைப் போன்றவர்.

# பிடித்த பத்து

முருகவேபரமநாதன்

பழுதில் தொல் புகழாள் பங்கநீ அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்பாய்
செழுமதி அணிந்தாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ எனக்கோர்
துணையென நினைவனோ சொல்லாய்
மழவிடையானே வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள் புரியாயே

அருட்பத்து 10

திருவாசகப் பெரு நூலிலே ஐம்பத்தொரு பதிகங்கள் அமைந்துள்ளன. கந்தர் அநுபூதியிலும் ஐம்பத்தொரு பாடல்கள் வருவதைக் காணலாம். இஃது ஐம்பத்தோர் எழுத்துக்களை (அட்சரங்கள்) நினைவு கூருகின்றன. ஐம்பத்தொரு பதிகங்கட்கும் ஐம்பத் தொரு திருப் பெயர்கள் உண்டு. அவற்றின் கீழ் அப்பதிக உட்பொருளும் சுருக்கமாக எழுதப்பட்டிருக்கிறது. பதிகத் தலைப்புக்கும் அப்புதை பொருட்குமுள்ள தொடர்பும் புரியு மாறில்லை. புரிந்தும் புரியாமற் தெரிந்தும் தெரியாமற் படித்துக் கொண்டே வாழ்கின்றோம். திருக்குறள் அதிகார வைப்பு முறையை யார் செய்தார்களெனத் தெரியாது இருப்பது போலத் திருவாசகப் பதிக வரிசையைத் தொகுத்தவர் பெயர் வெளிப்படவில்லை. இன்று வரை இப்பதிக அமைப்பிலே பத்தொன்பது பத்துக்கள் வருகின்றன. அவற்றிலொன்று பிடித்த பத்து. செத்திலாப்பத்தில் இருந்து (23) அருட் பத்து வரை ஏழு பத்துக்கள் தொடர்கின்றன. பின்னர் (31) கண்ட பத்துத் துவங்கி (35) அச்சப்பத்துவரை ஐந்து பத்துக்கள் அமைந்துள்ளன. பிடித்த பத்து முப்பத்தேழாவது பதிகம் இவை பத்தும் பாடல்கள் போன்றவை. எனவே பத்து எனப் பெயர் பெற்றன. பொதுவாக ஓன்பது திருமுறைப் பதிகங்களில் 10, 11. 12 பாக்களும் குறைந்த எண்ணுள்ள பாடல்களுடனும் திகழக் காணலாம். இப் பத்துப் பாடல்களிலும் அமைக்கப்பட்ட குறிப்பிட்ட தொடரோ தொடையோ, பேச்சோ, சொல்லோ ஓரே தன்மைத்ததாய் வருவதால் அவற்றின் பெயர் அப்பிரயோகங்களாகவே பெயர் பெற்றன.

உ+ம் உன் அடைக்கலமே, ஆசைப்பட்டேன், கண்டாய் அம்மானே, அதிசயம், கண்டாமே, பொல்லா மணியைப் புணர்ந்தே, வாழ்கிலேன், கண்டாய், அதெந்துவே யென்றருளாயே, அணி கொள்தில்லை கண்டேனே, அம்மநாம் அஞ்சுமாறே ஆர்பெறுவார் அச்சோவே, பிடித்த பத்திலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேனே என்ற அபூர்வமான பிரயோகம் வரக் காண்கின்றோம். பன்னிரு ஆழ்வார்கள் தந்த அருளிச் செயலான திரு நாலாயிரத்தில் (நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்) இப்பத்து என்ற பாவனை சற்று வித்தியாசமானது. நம் மாழ்வாரின் திருவாய் மொழி ஆயிரம் பாசுரங்கள் கொண்டது. இதைப் பத்துப் பிரிவாக்கி ஓவ்வொன்றும் முதலாம், இரண்டாம், மூன்றாம் பத்து என்ற வரிசையிற் பத்துப் பத்துக்கள் உண்டு. முன்னர் குறிப்பிட்டமை போல இப்பதிகப் பாசுரங்கள் பத்தாகவோ, பதினொன்றாகவோ சிலபோது பன்னிரண்டாகவோ வரலாம். இப் பத்து என்ற வழக்காறு பிற்பட்ட காலத்திலும் தொடரக் காணலாம். நடராஜப்பத்து, கருடப்பத்து, திருக்கருவைப்பதிற்றுப் பத்தந்தாதி தகுந்த உதாரணங்களாம்.

மணிவாசகப் பெருமான் வடித்த பிடித்த பத்திலே பயன் படுத்திய தொடர் “சிக்கெனப் பிடித்தேன்” என்பதாகும். பிடித்தேன், சிக்கெனப் பிடித்தேன், உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் என்ற பாவனை முதல் எட்டு வாசகங்களிலும் ஒரு நீர்மையதாய் அமைய ஒன்பதாவது வாசகத்தில் தொடர்ந்து என்ற வார்த்தையுடன் உன்னைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன். எனச் சுவாமிகள் பேசுகிறார். இந்தத் தொடர் ஓயாது இடையீடின்றி விடாமல் முறியாமல் உள்ளம் வரை அச்செயல் தொடரும், விட மாட்டேன் என்ற அருமையான பாவத்தையே புலப்படுத்துகிறது. நீ விட்டாலும் நான் விட்டு

விட மாட்டேன் என்ற தொனிப் பொருள் அங்கே பளிச்சிடக் காணலாம். இருந்தும் இடைவிடாதுன்னைச் சிக்கெனப் பிடித்தேன். என இரண்டாவது பாடலிலே வாதவூரர் தன் மனோ உறுதியையும் பக்குவத்தையும் வெளிப்படுத்துகிறார். இதை, திருவாசகத்தை முற்றோதுவோர், பாராயணம் செய்வோர், இசையுடன் பாடுவோர் நிதானமுடன் மனதில் கொள்ளல் நன்று. கல்வி தீட்டத் தீட்டக் கூடும். எனவே இடைமருத இடையீடற்ற முயற்சி எம்மை உயர்த்தும். பாடம் ஏறினும் ஏடது கைவிடோல் என்பது பழமொழி. இந்த இடையறா என்ற பாவனை நாவுக்கரசர் கோலத்திலும் பரிமளிக்கக் காணலாம்.

**இடையறாப் பேரன்பும் மழைவாரு மிணை**
**விழியும் உழவாரத் திண்**
**படையறாத் திருக்கரமுஞ் சிவ பெருமான்**
**திருவடிக்கே பதித்த நெஞ்சு**
**நடையறாப் பெருந்துறவும் வாகீசப்**
**பெருந்த கைதன் ஞானப் பாடற்**
**றொடையறாச் செவ்வாயுஞ் சிவவேடம்**
**பொலிவழகுந் துதித்து வாழ்வாம்**

(காஞ்சிப்புராணம்)

திருந்திய அன்பின் பெருந்துறைப் பிள்ளையெனப் பட்டினத்துப் பிள்ளைபோற்றும் ஆளுடையடிகளின் உள்ளப் பான்மையும் அடங்கா ஆர்வமும், சுறுசுறுப்பும் இப்பதிகப் பாடல்களில் அவர் பாவித்த தமிழில் (வடிப்பு) அவரைப் படம் பிடித்துக் காட்டக் காணலாம்.

எம்பொருட்டு உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் 1
இடைவிடாது உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் 2
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் 3
இருள் இடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் 4
எய்ப்பு இடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் 5
இரவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் 6
யான் உன்னைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் 9

பல்வேறு பாவங்களிற் தன் உறுதியான இறை ஈடுபாட்டைப் புலப்படுத்திய சுவாமிகள் இடையிலே தன் தளத்தை மாற்றி இறைவனை ஈசனே எத்தனே என்று விழித்து முன்னிலைப் படுத்தியும் பேசுகிறார். இந்தக் கட்டம் திருவாசகத்திலே ஆழங்காற் படுவோரின் மனதை விழிப்படையச் செய்யாமல் இருக்காது.

ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் 7
எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் 8
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்.

இப்படியெல்லாம் விழிப்புணர்வோடு செயற்பட்ட சுவாமிகள் எல்லாப் பாடல்களின் இறுதியடிகளை ஒன்றாகவே அமைத்துள்ளார். ஏன்? அதுதான் எங்கெழுந்தருளுவது இனியே யென்ற முத்தாய்ப்பு இறைவன் எந்நிலையிலும் தன் பிடியை விட்டு அசைய முடியாது என்ற இறைச்சிப் பொருள் நம்மை விழிப்படைய வைக்கிறது. எம்பெருமான் பள்ளியெழுந் தருளாயே எனத் திருப்பள்ளி யெழுச்சியைக் கருக்கலிலே பாடிய ஒரு பிரதம அமைச்சரின் உறுதி நிலையும் இறுதி நிலைப்பாடும் மாணிக்கவாசகராய் மாறிய பின் நன்கு தொழிற்பட்டுள்ளது நமக்குப் படிப்பினையே. வள்ளலார், எனைப் பள்ளி எழுப்பிய எம் பெருமானே பள்ளியெழுந்தருளாயே எனப் பாடி எமது உறங்கு நிலையை அருட்டியுள்ளார். சுவாமிகள் தான் சிக்கெனப் பிடித்தேன் என்று பேசும் கட்டங்களிலெல்லாம் பக்தர் பாதை தான் நான் மேற் கொண்ட இராஜ பாட்டை என்பதையும் எட்டாவது பாடலிலேயே படம் பிடித்துக் காட்டவும் தவறவில்லை.

**அத்தனே அன்பர் அண்டமாய் நின்ற**
**ஆதியே யாதும் ஈறு இல்லாச்**
**சித்தனே பக்தர் சிக்கெனப் பிடித்த**
**செல்வமே சிவபெருமானே**
**பித்தனே எல்லா உயிருமாய்த் தழைத்துப்**
**பிழைத்து அவை அல்லையாய் நிற்கும்**
**எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்**
**எங்கு எழுந்து அருளுவது இனியே**

பிடித்த பத்து 8

தன்னேரில்லாத் தலைவனாகிய இறைவன் ஒப்பில்லா மணியாகவும் மாசில்லா மணியாகவும் திகழ்கிறான். பிறர் கைபட்டுச் செருக்காத மணியைப் பொல்லா மணியெனப் புணர்ச்சிப்பத்திலே பாடிய வரும் சுவாமிகளே. சுயம்பு வாய் ஒளிமயமாய் மிளிரும் சிவனை அரும் பொன்னே மணியே என்று போற்றினார் தாயுமானவர். அப்பரோ திருமணியைத் தித்திக்கும் தேனைப் பாலையென வர்ணிக்கிறார்.

பட்டரும் மணியே மணியின் ஒளியே ஒளிருமணி புனைந்த அணியேஎன அபிராமியைப் பேசினார். மனோன்மணியைப் பங்கிலுறை இறைவனும் அக இருளையும் புற இருளையும் அகற்றுகிறான். எனவே தான் மாசிலாமணி யெனவும் ஒப்பில்லா மணியெனவும் சொன்னவரும் மணிமொழியார்தான். அவர் வாசகங்கள் மாணிக்கமாலையேதான். எய்ப்பு என்றால் இளைப்பு, களைப்பு, சோர்வு, வயோதிபம், முதிர்வு, என்று பொருள் இந்நிலை யாவருக்கும் பொது எனவே மாணிக்கர் உள்ளிட்ட எல்லாருமே எய்ப்பைப் பற்றி எடுத்தியம்பினர். ஒருவரது கருவி கரணங்களெல்லாம் ஓயும் போது செயற்பாடும் மங்கும். அதற்கு ஊன்று கோலாய் இருப்பவர் தன் இனத்தவர் அதையும் கடந்து இறைவனே எய்ப்பில்வைப்பாய் உதவுகிறான். வைப்பு என்றால் சேம நிதி, நிரந்தர வைப்பு, ஓய்வுதியம் என்று சொல்லலாம். முதுமைக்குச் சேமநிதி உதவுவது போல் இறைவனும் சேம வைப்பாகவே தாங்கிப் பேணுகிறான். வயது தளர்கையில் தைரியமுள்ள ஒருவர் அனுசரணை வேண்டும். இவற்றுக்கு மேலாகப் படைத்தவனின் தாங்கு தோல் தேவை. கண்ணும் சுழன்று காதும் அடைத்துச் செயல் இழக்கும் போது இறைவனை யார் நினைத்திருக்கிறார். எனவே அந்த நிலையை அடையுமுன் நான் தைரியமாக இருக்கும் போதே உனக்கு நான் அடைக்கலமானேன் என்று பாசுரம் செய்தவர் பெரியாழ்வார்.

**துப்புடையாரை யடைவ தெல்லாம்**
**சோர்விடத்துத் துணையாவ ரென்றே**
**ஒப்பிலே னாகிலும் நின்னடைந்தேன்**
**ஆனைக்குநீ யருள் செய்தமையால்**
**எய்ப்பென்னை வந்து நலியும் போதங்கு**
**ஏதும் நானுன்னை நினைக்க மாட்டேன்**
**அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன்**
**அரங்கத் தரவ ணைப் பள்ளியானே**

பெரியாழ்வார் திருமொழி 4:10.

இறைவன் அங்கிங் கெனாதபடி எங்கும் நீக்க மற நிறைந்தவன். மயிர் முனை செல்ல முடியா இடமெல்லாம் இறைவன் கரந்து நிறைந்து நிற்கிறார். ஈசனே நீ யல்ல திங்கு மங்கும் என்பதும் பேசினேன். ஓர் பேதமின்மை எனப் பாடியவரும் அடிகளாரே புறம் புறம் திரிந்த சிவபெருமானைப் புறம் போகாமல் இறுக்கிப் பிடித்து உள்ளத்திலே இருத்தி பாதுகாத்த சுவாமிகள் அவனை அசையவிடாமல் வைத்திருந்த காட்சியை நாம் கண்டோம். உருத் தெரியாக் காலத்தே உள் புகுந்த கூத்தனைத் தில்லையிலே கண்டவரும் அவரே. தாய் மறந்தாலும் தான் முலை சுரந்து காத்தவனும் அவனே. இதை திரிகூடஇராசம் பக்கவிராயர் வடித்துள்ளார்.

**ஈயறியாப் பூந்தேனே எழுத்தறியா மறைப் பொருளே**
**காயறியாச்செழுங்கனியே கற்பகத்தின்தனிக்கொழுந்தே**
**தாயறியாக் கருவில் இருந்து அமுதூட்டும் தாய்த் துணையே**
**நீயறியாப் பொருளுண்டோ நிகிலபரம் பரம மூர்த்தி**

குற்றாலத் தலபுராணம்

நாமெல்லாம் திருவாசகம் படிக்கிறோம் பிடித்த பத்தைப் பாடி மகிழும் அளவுக்கு இறையீடு பாடும் அகமும் புறமும் புனிதமாய் வாழ்கி றோமா கள்ளமில்லாத வெள்ளையுள்ளமே ஆண்டவன் இருப்பிடம் எனவே நாம் எம்மைத் தயார் செய்ய வேண்டும். மனதை வெளுக்க மார்க்கம் தேட வேண்டும். புனிதமான உணவை மேற் கொள்ள வேண்டும். புனித எண்ணங்களை விதைத்து நல்ல அறுவடை காண வேண்டும். அதை விடுத்து திருவாசகம் படித்தால் மட்டும் போதாது. நம் நடை முறைகள் ஒழுங்கு ஒழுக்கங்கள் எல்லாமே சீராய் அமைய வேண்டும். மனம், மொழி, உடம்பு மூன்றும் புனிதமாய் இருக்க உழைக்க வேண்டும். சீலம், ஒழுக்கம், பழக்க வழக்கம் எல்லாமே

மேன்மையடைய வேண்டும். சொல்லை யொத்துச் செயல் மனமும் தூயவராய் வாழ வேண்டும். பஞ்சமா பாதகங்களைச் செய்யக் கூடாது. பிறர் நலம் பேண வேண்டும். பிறருக்கு உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யக் கூடாது. சடங்குகள், கிரியைகள் அன்று சமயம். கோயில் தான் சமயமல்ல. கோயிலும் தேவை கொள்கையும் தேவை. மற்றவர்களுக்கு உபகாரிகளாய் வாழ வேண்டும். படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயிலாய் இருப்பது பாவம். புண்ணியம் நன்மை தரும். பாவம் துன்பம் விளைவிக்கும். போலி வேடங்களை விட வேண்டும். உண்மை வழி நடக்க வேண்டும். புகழ், மதிப்பு, கீர்த்தி, இவைகட்காக நம்மைப் பிழையான வழியிலே நடத்தல் பொருந்தாது. மனித நேயம் பேணல் முக்கியம். எனவே நடிப்புச் சுதேசிகளைப் பார்த்துப் பாரதி நளினம் செய்தார் இப்படி

**சிந்தையிற்கள் விரும்பிச் சிவசிவ என்பது போல்**
**வந்தே மாதரம் என்பார் கிளியே**
**மனத்திலதனைக் கொள்ளார்**
**நடிப்புச் சுதேசிகள்**

திருவாசகம் சிவனே முழுமுதற் தெய்வம் எனச் சொல்கிறது. வாதவூரடிகள் சிவனையே பாடிய அருளாளர். பிற தெய்வம் தொழாதவர் திருவாசகத்தைப் படிப்பவர்கள் புற தெய்வங்கள் வழிபாடுகளை மேற் கொள்வர். பசனையில் திருமுறைக்கு இடமில்லை. எனவே சிக்கெனப் பிடிக்கு முன் மனதை வெளுக்க வேண்டும். இதையே பாரதி மனம் வெளுக்க வழியில்லை யென்ற முத்துமாரிப் பாட்டிலே

**கலகத்தரக்கர்பலர் - எங்கள் முத்து**
**மாரியம்மா எங்கள் முத்துமாரி**
**கருத்தினுள்ளே புகுந்து விட்டார்- எங்கள் முத்து**
**மாரியம்மா எங்கள் முத்து மாரியம்மா**

எனப் பாடினார். "மனமது செப்பமானால் மந்திரம் செபிக்க வேண்டா" மென்பது பழமொழி.

"உள்ளத்தில் உண்மையொளி உண்டாயில் வாக்கினிலே ஒளியுண்டாகும்". போலி வேஷங்களை விட்டு மனிதன் மனிதனாக நல்ல சைவ சமயிகளாளக வாழப் பழக வேண்டும். இதற்கு வழி பற்றுகளை விடுத்து இறை பற்றை மேற் கொள்வதே சிறந்த வழி

**'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு'**
(350 குறட்பா)

பற்றில்லாதவனாகிய கடவுளுடைய பற்றை மட்டும் பற்றிக் கொள்ள வேண்டும். உள்ள பற்றுக்களை விட்டொழிப்பதற்கே அப்பற்றைப் பற்ற வேண்டும்.

எனவே இறை பக்தியை வளர்த்து காம குரோதங்களை எரிப்பவர் இறைவன் அடிக்கீழ்வாழ்வர்

அப்பர் சுவாமிகள் பழுத்த பழம் அவர் திருவாக்கிலும் ஒரு பாடல் இறைவனைத் தொடர்ந்து பிடித்தால் - அவன் பொறுக்க மாட்டாமல் அருள் பாலிப்பானென அழகொழுகப் பாடியுள்ளார்.

**சிவன் எனும் நாமம் தனக்கே யுடைய செம்மேனி**
**எம்மான்**
**அவன் எனை ஆட்கொண்டு அளித்திடுமாகில் அவன்**
**தனையாள்**
**பவன் எனும் நாமம் பிடித்துத் திரிந்து பன்னாள்**
**அழைத்தால்**
**இவன் எனைப் பன்னாள் அழைப்பொழியான் என்று**
**எதிர்ப்படுமே**

எவன் ஒருவன் தான் தப்பு செய்பவனாக இருந்து கொண்டு பிறர் செய்யும் குறைகளை கண்டு பிடித்து கண்டிக்கிறானோ, எவன் தன் சக்தியை இழந்து பலஹீனமான இருதயத்துடன் இருந்து கொண்டு கோபப்படுகிறானோ அவன் விவேகமில்லாதவன் ஆகிறான்.

# கந்தபுராண வசனம்

இலக்கிய கலாநிதி
பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை

**ஈழமும் கந்தபுராணமும்**

கந்தபுராணம் கம்பராமாயாணத்திற்கு ஒரு நூறாண்டு முந்தியது. சுப்பிரமணியக் கடவுளின் திருவருள் கைவந்த கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் அருளியது. திருமுறை வரிசையில் வைத்துப் போற்றத்தக்கது.

கந்தபுராணத்துக்குப் பிறப்பிடம் கந்தசாமியின் திருவருள் பெருகுங் காஞ்சிமா நகரமே யாயினும் அதனைப் பிள்ளைமைப் பருவத்திலிருந்து பேணுகிற முறையிற் பேணி வளர்த்தெடுக்கும் தலவிஷேடம் படைத்தது ஈழம்; சிறப்பாக யாழ்ப்பாணம்.

ஈழத்தில் கோயில்கள் தோறும் சுவாமி சந்நிதியில், சந்நிதி விரோதமின்றி மிக்க பயபக்தியுடன் புராண படனம் நிகழ்த்தும் முறை வேறு எங்கும் காணாதது. இம்முறையின் வரலாறு சிந்திக்கற்பாலது.

ஈழத்தின் சிரத்தானம் யாழ்ப்பாணம். இதன் ஆதிப் பெயர் மணற்றி. இதனை முதன் முதலாண்ட தமிழரசன் யாழ்ப்பாணன். பாணருக்கு யாழ் கைவந்தது. யாழ்ப்பாடி என்றும் அவன் பெயர் வழங்கும். அவனது இயற்பெயர் வீரராகவன்.

அந்தகக் கவி வீரராகவன் வேறு; இந்த வீரராகவன் வேறு. கவிவீரராகவன் அந்தகன் (குருடன்) பிற்காலத்தவன். ஆரியச் சக்கரவர்த்திகள் யாழ்ப்பாணத்தை அரசாண்ட காலத்தில் பரராசசேகரனைப் பாடிப் பரிசில் பெற்றவன், அந்தகக்கவி வீரராகவன்.

யாழ்ப்பாடிக்குப் பின் சிறிது காலம் யாழ்ப்பாணம் அரசின்றி இருந்தது. இந்த இடைவெளிக் காலத்தின் பின் யாழ்ப்பாணத்தை அரசு செய்தவர்கள் ஆரியச் சக்ரவர்த்திகள். பரராஜசேகரன் ஆரியச் சக்ரவர்த்திகளுள் ஒருவன். மணற்றியை யாழ்ப்பாணமாக்கிய யாழ்ப்பாடியின் வரலாற்றை ஆராய்வது ஒரு அளவுக்கு யாழ்ப்பாணச் சரித்திரத்தின் மூல வேரைக் கண்டு பிடிப்பதாயிருக்கும். அந்த மூலவேர் புராணபடன முறையின் தோற்றத்தைக் காண வழி செய்வதாயிருக்கும்.

முதலில் யாழ்ப்பாணனான யாழ்ப்பாடிக்கும் மணற்றிக்கும் உள்ள தொடர்பை விசாரிப்போம். வீரராகவன் எனப் பெயரிய யாழ்ப்பாணன், கண்டியிலிருந்து அரசாண்ட அரசன் ஒருவன் இன்னிசைபால் இனிமை செய்ய கண்டி அரசன் உவந்து யாழ்ப்பாணனுக்கு அளித்த பரிசில் மணற்றி; இம் மணற்றி, கண்டி அரசனுக்கு மாதாவழிச் சொத்து மாதா மாருதப்புரவல்லி விக்கிரமசோழன் புதல்வி, மாமுகத்தினள், மா-குதிரை.

இவள் பல தலங்களுக்கும் யாத்திரை செய்து இறுதியாக நகுலாசலம், எனப்படும் கீரி மலைக்கு வந்து சேர்ந்தாள். அங்கே தவஞ் செய்து கொண்டிருந்த கீரிமுக முனிவரான நகுல முனிவரின் அநுக்கிரகம் பெற்று, கீரிமலைத் தீர்த்தத்தில் மூழ்கியதும் மாமுகம் விடுபட்டு அழகிய முகத்துடன் கூடிய அரசிளங்கு மரியாயினாள்.

மாமுகம் விட்டதன் ஞாபகமாக மாவிட்டபுரத்தை அமைத்து, கோயிலெடுத்துக் கோயிலில் என்றும் இளையோனான திருமுருகனைப் பிரதிட்டை செய்தாள்.

முக அழகியாய் மாறிய அவளைப் பாலசிங்கன் என்னும் அரசன் மணந்து பெற்ற புதல்வனே கண்டியரசன்.

இனி மணற்றிக்கு வருவோம். பல்வேறு மக்களை அழைத்து வந்து குடியேற்றஞ் செய்து, மணற்றியை ஆளத் தொடங்கினான். யாழ்ப்பாடி. அழைத்து வந்தவர்களுள் முக்கியஸ்தர் ஒருவர். அவர் கச்சிக் கணேசையர் மேலும் மிக முக்கியமான பொருள் ஒன்று குடியேறியது. அது கந்தபுராணம்.

கச்சிக் கணேசையரும் யாழ்ப்பாடியும் கச்சியப்ப சிவாச்சாரியரோடு உடன் படித்தவர்கள் ஆகலாம். அன்றி கந்தபுராண அரங்கேற்றத்திற் பங்கு பற்றியிருப்பார்கள் என்றும் ஊகிக்கலாம். கச்சியப்ப சிவாச்சாரியார் காலத்திலேயே கந்தபுராணம் யாழ்ப்பாணத்துக்கு வந்து விட்டது.

**புராண படனம்**

இங்கே கோயிற் சந்நிதியிற் புராண படனம் நடத்த வேண்டியிருந்ததால், சந்நிதி விரோதமின்றிப் புராண படனம் நடத்தும் முறையை கச்சிக்கணேசையரும் யாழ்ப்பாடியும் கலந்துரையாடி வகுத்திருக்கலாம்.

அரியாலைச் சித்திவிநாயகர் ஆலயத்திலே தான் முதன் முதல் இந்தப் புராண படனத்தைக் கச்சிக் கணேசையர் ஆரம்பித்தார் என்று சொல்வதுண்டு.

புராணங் கேட்போரும் சந்நிதி விரோதமின்றி விரதம் மேற்கொண்டுவேறு பலமின்றிக் கேட்குந் திறமும் விதிக்கப்பட்டது.

ஆண்களும் பெண்களும் கோயிற் சந்நிதியிற் புராணங் கேட்டார்கள். சிறப்பாகப் பெண்கள் அனைவரும் புராணங் கேட்டவர்களாயிருந் தார்கள்.

**நாவலர் பெருமான்**

தமிழரசர்களுக்குப் பின், பறங்கியர் ஒல்லாந்தர் காலத்தில், கோயில்களனைத்தும் தரைமட்ட மாயின. பெண்களின் மன்க் கோயில்களை இடிக்க அவர்களால் முடியவில்லை. அங்கே கந்தபுராணம் கோயில் கொண்டிருந்தது.

இந்தியாவிலே வித்துவான்கள், சைவகுருமார் முதலியோருள்ளும் கந்தபுராணம் முதலியன அறிந்தோர் சிலர். இத் தேசத்திலோ பெண்களுள்ளும் அவை அறியாதார் இலர். என்கின்றார் நாவலர் பெருமான்.

பெண்களின் உதிரத்தில் கந்தபுராணம் இரண்டறக் கலந்திருந்தது. அவ்வாறாய உதிரத்தில் உதித்தவரே நாவலர் பெருமான். “மேன்மைகொள் சைநீதி” என்ற கந்தபுராணத் தொடர், நாவலர் பெருமானின் குறிக்கோள் மந்திரம்.

மதமாற்றத்துக்கென்றே வந்தவர் பார்சிவல் பாதிரியார் அவரிடம் ஆங்கிலம் கற்கச் சென்றவர் நாவலர் பெருமான். பெருமான் மேற் கொண்ட சைவநீதியின் மேன்மை பாதிரியார் மதமாற்ற நோக்கத்தை மறக்கவும் (எனது) குரு என்று தம்மை (நாவலர் பெருமானை)த் துதிக்கவும் வைத்து விட்டது.

இந்தியாவிலே சைவசமயிகளுள்ளுஞ் சைவ சமயத்தில் உட்பற்றில்லாதவர்கள் பலரேயாம் இத்துணை விஷேடத்துக்குக் காரணந்தான் என்னையெனில் கூறுதும்.

“எத்தனைக் காலம் திருப்பித் திருப்பிப் படித்தினும் கேட்பினும் எத்துணையுந் தெவிட்டாது தித்தித்தமுதூறும் அதியற்புத அதிமதுரத்திவ்விய வாக்கிய கந்தபுராணத்துள்ள பதியிலக்கணத் திருவிருத்தங்களைக் கேட்டல் சிந்தித்தல் களினால் இவர்கள் உள்ளத் தூற்றெடுத்த மெய்யுணர்வேயாம்” என்று யாழ்ப்பாணச் சமய நிலையில் நாவலர் பெருமான் கூறியிருப்பது இங்கே நினைவு கூரத்தக்கது.

நாவலர் பெருமானின் தெளிவான செந்தமிழ் நடைக்கும் வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தப் பிடிக்கும் மூல ஊற்றுக் கந்தபுராணமேயாகும்.

நாவலர் பெருமான் காலத்தில் புராண படனம் உச்சநிலை எய்தியது. இதிலிருந்து தமிழரசர் காலத்தில் புராண படனம் எத்தனை உன்னத நிலையில் இருந்திருக்குமென்பது ஊகிக்கத் தக்கது.

சைவசமயி, பலசமயங்களுக்கும் பொதுவான இலக்கணமும், இருபத்து மூன்று சிறப்பிலக்கணமும், உடையனாதல் வேண்டுமென்பது கந்தபுராண முகப்பில் சிவபுராண படன விதியிற் காட்டப்பட்டது. சிறப்பிலக்கணங்கள் ஒன்று புராண படனம். அது ஏனைய சிறப்பிலக்கணங்களையும் பொது இலக்கணங்களையும் வருவிக்கவல்லது. அவ்விஷயத்தில் கந்தபுராண படனம் தனிச் சிறப்பு வாய்ந்தது.

## நாவலர் தீர்க்கதரிசனம்

ஆங்கில மோகம் அதிகரிப்பதையும் "நல்வழி காட்டுவோம். உடுபுடைவை சம்பளம் நாளு நாளுந் தருவோம். நாம் சொல்வதைக் கேளும்." அன்று.

பாதிரிமார் தூபம் இடுதலையுங் கண்டு இம் மோகம் ஆண்களை விழுங்கிப் பெண்களிலும் தாவும் இத் தேசத்திலே பெண்களுள்ளும் "புராணம் அறியாதார் இலர்" என்ற காலம் போய் "புராணம் அறிந்தார் இலர்" என்ற காலம் வரலாம் என்ற எண்ணம் நாவலர் பெருமானை விழுங்கியது கலக்கம் குடி கொண்டது.

மக்களை நல்வழிப்படுத்திப் பிறவிப் பிணியைப் போக்குவதற்குக் கந்தபுராணம் கைகண்ட பரம ஔஷதம்.

அதனைக் கற்றோரும் மற்றோரும் ஆகிய வருங்காலத்தவர் யாவரும் எளிதிற் பயன் படுதற்கு ஏற்ற அநுபானம் யாதாம் என்ற சிந்தனையில் உதயமானது.

## கந்தபுராண வசனம்

அச் சிந்தனையை வலி செய்தது. பெரிய புராண வசனம் நம்முடைய சைவசமய நூல்களை எல்லாருக்கும் எளிதில் உபயோகமாகும் பொருட்டு வெளிப்படையாகிய வசன நடையிற் செய்து அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்தின் அது பெரும் புண்ணியமாகும். என்று துணிந்து சில வருடத்துக்கு முன் பெரிய புராணத்தை அப்படிச் செய்தேன். அது அநேகருக்குப் பெரும் பயன் விளைத்தலைக் கண்டறிந்தமையால் கந்தபுராணத்தையும் அப்படியே செய்கின்றேன். என்பது நாவலர் பெருமானின் கூற்று.

இப்பொழுது சில முக்கிய ஸ்தலங்களில் புராண படனம் கேட்போரின்றி நடைபெறுவதுண்டு. கேட்பவை அங்குள்ள தூண்களே,

சில இடங்களில் ஒருவர் பாட்டை வாசிக்க மற்றொருவர் உரையை வாசிக்கின்றார். கேட்பதற்குத்தான் ஆளில்லையே . உரையை வாசியாமலும் விடலாம். வசனம் வாசிக்குங் காலம் தூரத்தில் இல்லை. வீடுகளில் வீட்டாரும், அயலில் உள்ளவரும் சுற்றத்தவரும் விரதமிருந்து வசனத்தை வாசிக்கக் கேட்குங் காலம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. சுபதினத்தில் தொடங்கிச் சுபதினத்தில் பூர்த்தியாக்கலாம்.

பூர்த்திக் காலத்திலும் திருவவதாரம், திருக் கல்யாணம் முதலிய விஷேட நிகழ்ச்சிகளிலும் இயன்ற அளவு விஷேட ஆராதனை அன்னதானம் நடக்கலாம்.

சைவசமயிகள் சிவபுராணங்கள் வாங்கி தங்கள் தங்கள் சுற்றத்தார் முதலாயினோர் கேட்பமெய்யன்போடு வாசித்து பாவங்களை வெறுத்து தங்கள் தங்களால் இயன்ற புண்ணியங்களை விதிப்படி சிரத்தையோடு செய்து சிவபெருமானை வழிபட்டு உய்யக் கடவர்கள் என்பது நாவலர் பெருமான் கூற்று. இக் கூற்று கந்தபுராண வசனத்துக்கு மிக மிகப் பொருத்தமான தலையாய கூற்று.

கந்தபுராண வசனமெங்கும் பரவ வேண்டும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை நாவலர் நினைவாகக் கடந்த காலங்களில் செய்த அருமையான காயங்கள் அநேகம்.

நாவலர் பெருமானின் ஆத்ம சக்தி தக்கார் ஒருவரைத் தூண்டித் தாம் தொடக்கி வைத்த தூண்டி வெளிப்படுத்தி யிருக்கின்றது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபைக்கு, நாவலர் பெருமானின் ஆத்மிக ஆசி என்றும் இருந்து கொண்டேயிருக்கும்.

கந்தபுராண உதிரத்தில் உதித்த நாவலர் பெருமானின் ஆன்ம சக்தி இருந்தவாறு

**கந்தபுராண வசனம்**
**என்றும் நிலவுக**
**எங்கும் பரவுக.**

# அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்

பண்டிதர் ச. சுப்பிரமணியம்

வையக வாழ்வு வண்டிச் சக்கரம் போன்றது. வாழ்வும் தாழ்வும் தனி மனிதனுக்கும் சமுதாயத்துக்கும் வளர் பிறையும் தேய்மதியும் போல் மாறி மாறி வருவது வரலாறு. "எந்தச் சமுதாயம் செல்வச் செருக்காலும் அதிகார மமதையாலும் தரும நெறியையும் சமய நெறியையும் மறந்து மனம் போனபடி அக்கிரமங்கள் செய்து வருமோ அச்சமுதாயம் அழிவை நோக்கிச் செல்கிறது" எனலாம். இப்படி நமது சைவ சமய சமுதாயம் காலசக்கரத்தில் பலமுறை நலிந்து தாழ்வுற்றது, என்பதைச் சரித்திரம் கூறும். இங்ஙனம் தாழ்வுற்ற சமயங்களில் சன்மார்க்கர்களான சான்றோர் சிலரோ பலரோ செய்த தவத்தாலும் வேண்டுதலாலும் இறைவனருளால் அவதார புருஷர்கள் தோன்றி தமது சைவ நெறியையும் சைவ மக்களையும் தாழ்விலிருந்து மீட்டுப் புனருத்தாரணம் செய்து மீண்டும் விருத்தி பெறச் செய்தனர். சென்ற சில நூற்றாண்டுகளில் அந்நியர் ஆட்சி, மொழி, சமயம் ஆகியவற்றின் ஆதிக்கத்தால் நமது தமிழும் சைவமும் தாழ்வுற்றமையும் அப்போது நாவலர் பெருமான் அவதரித்து அவற்றுக்குப் புனர் வாழ்வளித்ததும் அறிவோம். அவர் மறைந்து நூறாண்டு கழியுமுன்னரே மீண்டும் நம் தமிழ் மொழியும் சைவமும் நலிவுற்றழியும் பாதையில் நடப்பதைக் காணும் துர்ப்பாக்கிய நிலையை அடைகிறோம். நம் சைவத் தமிழ்ப்பாரம்பரியமும் பண்பாடும் நம்மவரிடையேயுள்ள போலிகளாலும் சமூக விரோதிகளாலும் மேலும் சீரழிக்கப்படுகின்றன.

இந்நிலையில் இவற்றைப் போற்றி வளர்க்க எமது சாதாரண மனித சக்தியால் முடியாது. அசாதாரண தெய்வ சக்தி பெற்ற அவதார புருஷர் ஒருவர் தோன்ற வேண்டுமாயின் அல்லலுற்று ஆற்றாது வருந்தும் நாம் சிவனைத் தியானித்துத் தோத்திரம் செய்து வர வேண்டும். எமது வேண்டுதலுக்கு நிச்சயம் இறைவன் செவி சாய்ப்பான்.

> காலையில் சூரியஉதயம் ஆகும்வரை நின்று கொண்டும், மாலையில் சூரியன் அஸ்தமித்து நட்சத்திரங்கள் தெரியும் வரையில் உட்கார்ந்து கொண்டும் ஜெபம் செய்ய வேண்டியது காலையில் கிழக்கு பார்த்தும், மாலையில் மேற்கு பார்த்தும் ஜெபிக்க வேண்டும்.

ஈழத்துச் சைவத் தமிழ் மக்களின் கலாசாரம் கந்தபுராண கலாசாரம் என்பர். ஊர் தோறும், கோவில் தோறும் சிலர் இல்லங்களிலும் ஆண்டுக் கொருமுறை கந்தபுராண படனம் நடந்து வந்தது. எனது வாழ்வில் முதல் முப்பதாண்டும் இந்தக் கந்தபுராண கலாசார வாழ்வு நடந்ததைக் கண்டேன். இக் காலத்துக்கு முந்திய காலத்தில் இந்தப் புராண படன முறை மிகச் சிறப்பாய் இருந்ததாக முன்னோர் சொன்னார்கள். பிந்திய முப்பதாண்டுகளில் "கரியாய்ப் பரியாகி... திரித்திரியாய்த் தேய்ந்ததே" என்ற ஔவை கூற்றுப் போல மறைந்து தேய்ந்து போவதைக் காண்கின்றேன். இந்தக் கந்தபுராண படனத்தைப் பக்தி சிரத்தையோடு நடத்த வேண்டிய வேண்டியாங்கு எய்திய மெய்யடியார் பலரை நாம் அறிவோம்.

இன்றைய அணுசக்தி யுகம் கந்தபுராணம் முழுவதையும் படனஞ் செய்யச் சாதகமாக அமையாவிடினும் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட கந்த புராணப் பாடல்களில் உயிர் நிலையான ஒரு சில பாடல்களையாவது நாம் நாடோறும் பாராயணம் செய்துவரின் அவதார புருஷர் ஒருவரை நமக்கு இறைவன் நல்கியருள்வான். இராமாயணத்தில் சிறையிருந்த செல்வியின் செம்மையை அனுமனைக் கண்டு பேச வைப்பதால் அப்பகுதியை, அந்நூலின் மிகச் சிறந்த சுந்தர காண்டமாக அமைத்தான் கம்பன். அது போலவே கந்தபுராணத்தில் சூரன் வைத்த சிறையில் நூற்றெட்டு யுககாலம் கிடந்து வருந்தும் இந்திர குமாரன் சயந்தனும் தேவரும் படுந் துயரை வீரவாகு தேவர் கண்டு பேச வைத்த இப்பகுதியையே இந்நூலின் உயிர்

அதிகமாக உண்டால், நோய், ஆயுள் குறைவு ஏற்படுவதோடு உணவு பஞ்சமும் ஏற்படும். அதனால் அளவோடு மேற்குறிப்பிட்டபடி உண்ண வேண்எயது தர்மத்தையும் ஆஸ்திகத்தையும் விரும்புகின்றவர்கள், சூடு, நுரை இல்லாத ஜலத்தினால் கிழக்கு அல்லது வடக்கு முகமாக இருந்து ஆசமனம் செய்ய வேண்டும். கிழக்கு அல்லது வடக்கு முகமாக பார்த்து குளிக்க வேண்டும். ஆடிப் பெருக்கன்று உணவை எடுத்து பகல் 24 நாழிகைக்கு மேல் கொண்டு போய் ஓடுகிற ஜலத்தில் அல்லது தடாகத்தில் உள்ள மீனுக்குப் போடுவதால் கிடைக்கும் புண்யம் அதிகம்.

நிலையாக அமைய மகேந்திர காண்டம் எனப் பெயரிட்டு ஆக்கித் தந்திருக்கிறார் கச்சியப்ப சிவாச்சாரியார். கந்தபுராணத்து உயிர் நிலையான சயந்தன் புலம்புறு படலத்தில் இருபத்து நான்கு படலங்கள் சோகத்தின் சிகரத்தில் நின்ற சயந்தன் புலம்புவானாய்ச் சிவனைப் போற்றுவானாக அமைந்தவை அவையே. பாராயணஞ் செய்ய வேண்டியன.

வேலவன் விடுத்த தூதராகிய வீரவாகு, வீர மகேந்திர நகர் முழுவதையும் சுற்றிப் பார்த்துக் கொண்டு விண்ணவர் சிறைக் கூடத்துக்கு முன் வந்து சேருகிறார். அவர் கண்ணெதிரிலே சிறைக் காவலரான அசுரர்கள், சிறையிருக்கும் சயந்தனையும் மற்றை வானவரையும் சொல்லொணா இம்சைகள் செய்கின்றனர். முடிவில் அசுரரே கை சலித்து ஓய்ந்திருக்கிறார்கள். இம்சைப்பட்ட தேவர்கள் அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருந் துணைவனான சிவனை நினைந்து உள்ளம் உருகிப் புலம்புவாராய்ப் போற்றுவாராயினர். இதனைக் கச்சியப்ப சிவாச்சாரியர்-

**'அத்தகைய காவல் அவுணர்,**
**அவர்க்கனித்தாய்**
**மொய்த்தொருசா ரீன்டி**
**முறைநீங் கலர் காப்ப**
**எய்த்த அமரருடன்**
**இந்திரன்சேய் பண்ணவருள்**
**உத்தமனாம் கண்ணுதலை**
**உன்னிப் புலம்புறுவான்'**

என்று தோற்றுவாய் செய்து கொள்கிறார்.

**'வந்திப்பவர் பவங்கள்**
**மாற்றுவோய்! எத்தேவர்**
**சிந்தைக்கும் எட்டாச்**
**சிவனே; செழுஞ்சுடரே!**
**இந்தப்பிறவிஇடர் உழப்பச்**
**செய்தனையோ?**
**வந்தித்த நின்புணர்ப்பை**
**யாரே கடந்தாரே?'**

(பொருள்) வந்திப்பவர்க்குப் பிறப்பொழித்து வீடருள்பவனே, உயர்ந்த தேவர் சிந்தனைக்கும் எட்டாத உயர்ந்தவனே, சோதிவடிவனே இந்த இப்பிறப்பை நாம் துன்பத்தையே அனுபவிக்கும்படி விதித்தாயோ? துன்பத்துக்கு விடிவே இல்லையோ? எம்மைத் திருத்தும் பொருட்டு வருத்துகின்றநீ இத்துன்ப வாழ்வில் எம்மைப் புணர்த்தி வைத்த நியதியை யாரே கடக்க வல்லார்?

**'கைநாகத் துக்கும்**
**கயவாய்க்கும் நாரைக்கும்**
**பைநாகத் துக்கும்**
**படரும் சிலந்திக்கும்**
**பின்னாகிய உயிர்க்கும் பேரருள்**
**முன் செய்தனையே**
**எந்நா யகனே எமக்கேன்**
**இரங்காயே'**

(பொருள்) (கைநாகம் - யானை, கயவாய் - கரிக்குருவி, பைநாகம் - பாம்பு) உன்னை வழிபட்ட யானை, கரிக்குருவி, நாரை, பாம்பு, சிலந்தி இவற்றிலும் கீழான உயிர்கள் யாவுக்கும் பேரருள் புரிந்தாய் பிரானே. இத்தகைய அவ்யாச கருணாமூர்த்தியான எங்கள் நாயகனே உன்னடியார்களும் உயர்ந்த தேவர் குலத்தவருமாகிய எமக்கு ஏன் இன்னும் இரங்கி அருளாதிருக்கின்றாய்?

(இப்பிராணிகளுக்கருள் புரிந்தமையைப் புராணக் கதைகளால் அறிக.)

# அதனால் அவர் ஆசையுடையவர்

திருமுருக கிருபானந்தவாரியார்

துருபதன் என்ற பாஞ்சாலதேசத்து மன்னன் இளமையில் துரோணருடன் சேர்ந்து அங்கிவேச முனிவரிடம் வில்வேதம் பயின்றான். துரோணர் துருபதனுக்கு அநேகநுட்ப திட்பங்களைச் சொல்லிக் கொடுப்பார். அதனால் துரோணரிடம் அதிக அன்பு வைத்திருந்தான் துருபதன். "நான் அரச பதிவியேற்ற பின் தங்கட்குப் பாதி ராஜ்யந்தருவேன்" என்றான். "பிராமணனாகிய எனக்கு ராஜ்யம் ஏன்"? என்றார் துரோணர்.

வித்தை கற்று முடிந்தபின் அங்கிவேச முனிவரை வணங்கியும், துரோணரைத் தொழுதும், மிக்க அன்பான வார்த்தைகளை மொழிந்தும், பிரியா விடைபெற்றுத் துருபதன் தன் பாஞ்சால நகரை அடைந்தான். அவன் தந்தை புருஷத மன்னன் மகனுடைய கலைநலத்தைக் கண்டு களிகூர்ந்தான்.

மகனுக்கு முடிசூட்டி அரச பதவியைத் தந்து விட்டு, புருஷத வேந்தன் மாதவஞ் செய்ய வனம் புகுந்தான்.

துருபதன் அரியணையில் இருந்து அரசு புரிவானாயினான்.

துரோணர், கிருபியென்ற கற்புக்கரசியை மணந்து கொண்டார். துரோணர் சிவபெருமானை ஆராதித்தார். சிவானுக்கிரகத்தால் கிருபி வயிற்றில் ஒரு குழந்தை குதிரையைப் போல் கனைத்தது. அதனால் "அசுவத்தாமா" என்று பேரிட்டார்கள்.

அசுவத்தாமா தாய்ப்பால் இன்றி அழுதான். மாப்பாலையன்றி ஆப்பால் இல்லை. குழந்தையின் துயரை நீக்கக் கருதிய துரோணர், தன் மனைவியுடன் குழந்தையை எடுத்துக்கொண்டு ஒரு பசுவை வேண்டிப் பெறும் பொருட்டுத் துருபதனிடம் வந்தார்.

துருபதன் நட்பின் தகைமையறியாது அவரை அவமதித்தான். மகாசபையில் தன்னை அவமதித்தது குறித்துப் பெரிதும் உள்ளம் வெந்து நொந்து துரோணர் கூறுகின்றார்.

"துருபதனே! நீயும் நானும் அங்கிவேச முனிவரிடம் படித்தபோது என்னுடன் நீ பழகியதும், நான் உனக்கு உரைத்த கலை நலங்களையும் செல்வச் செருக்கினால் மறந்தனை போலும். இதோ இங்குள்ள ஒரு துரும்பை எடுத்து அபிமந்திரித்து விடுத்தால் அது அக்கினியஸ்திரமாகி உன்னையும் உன் நகரையும் எரித்துச் சாம்பலாக்கி விடும். ஏ அரச அதமனே! அந்தணனாகிய எனக்குக் கோபம் வரக் கூடாது. பிறர் செய்த குற்றங்களைப் பொறுப்பது என் குல தருமம். ஆதலால் நீ அரசவையில் என்னை அவமதித்த இப் பெரும் பிழையை நான் பொறுத்துக் கொண்டேன். ஆனால் உனக்குப் புத்தி புகட்டுவேன். என் மாணவனைக் கொண்டு உன்னைத் தேர்க்காலில் கட்டுவித்து அவமானஞ் செய்வேன்" என்று கூறவிட்டு, அடிபட்ட நல்ல நாகம்போல் பெருமூச்சு விட்டுக்கொண்டு புறப்பட்டார்.

அவருடைய மைத்துனர் கிருபாச்சாரியார் அப்போது அத்தினபுரத்தில் குருகுலத்து ராஜகுமாரர்கட்கு வேதம், தநுர்வேதம் முதலிய கலைகளைப் பயிற்றுவித்துக் கொண்டிருந்தார். அங்கு சென்று மகனைக் காப்பாற்றலாம் என்று துரோணர் அத்தினபுரத்தை நாடிவந்தார். கிருபர் வீட்டில் தங்கிக் களைப்பாறினார். துரோணரது வரவையறிந்த பீஷ்மர் அவரைச் சிறந்த முறையில் வரவேற்று, ஆடை அணிகலன்கள் தந்து, அரசவையில் அவரை ஒரு அங்கமும் வகிக்கச் செய்து, பாண்டவர்கள், துரியோதனாதிகள் என்ற இரு திறத்து மக்களையும் அவர்பால் காட்டி, கிருபருடன் சேர்ந்து சிறந்த வில் வேதத்தைப் போதிக்குமாறு நியமித்தார்.

அன்றுமுதல் அந்தக் குரு குலத்தில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. இராஜ குமாரர்கள் பெரு மனமகிழ்ச்சியுடனும் ஊக்கத்துடனும் வில் வேதம் பயின்றார்கள். அர்ச்சுனன் எல்லோரிலும் மிக்க ஊக்கத்துடனும் விடா

முயற்சியுடனும் பயின்றான். வில் பிடித்தவர்களில் அவனுக்குச் சமானம் இல்லையென்று உலகம் புகழுமாறு தலைசிறந்த வில்லாளியாக ஆனான்.

விற்பயிற்சி முடிந்தவுடன் அரங்கேற்றம் நடைபெற்றது. எல்லோரும் துரோணரையும் அவருடைய திறமையையும் பாராட்டினார்கள்.

பின்னர் அந்த அரச குமாரர்கள் பொன்னும், மணிகளும், பொன்னாடைகளும், பழங்களும் பல தட்டுகளில் நிறைத்துக் கொண்டு துரோண ருடைய திருமுன் வைத்து வணங்கி "எங்கட்குக் கல்விநலம் தந்து வாழ்வளித்த பெருந்தகையே! இவைகளைக் குரு தட்சிணை யாக ஏற்று எங்களை ஆசீர்வதியுங்கள்" என்றார்கள்.

துரோணாச்சாரியார், "என் அருமந்த மாணவர்களே! உங்களுக்கு எல்லா நலன்களும் இறையருளால் பொருந்துக. நீங்கள் தந்த இப் பொன்னும் மணியும் ஆடையும் எனக்கு வேண்டா. எனக்கு நீங்கள் தரத்தக்க தட்சிணை ஒன்றுண்டு. பாஞ்சால தேயத்தை யாளுகின்ற துருபதனை வென்று, அவனை உயிருடன் தேர்க்காலில் கட்டிக்கொணரவேண்டும். அதுவே நான் விரும்பும் குருதட்சிணை" என்றார்.

பாண்டவர்களும் துரியோதனாதிகளும் சதுரங்கசேனைகள் சூழப் புறப்பட்டுப் போர்க் கோலத்துடன் பாஞ்சாலனுடைய நகரையடைந் தார்கள். முதலில் துரியோதனாதிகள் போர் புரிந்தார்கள். தோல்வியடைந்து உடம்பு புண்ணாகிப் புறங்கொடுத்து ஓடி ஊர் திரும்பினார்கள்.

அர்ச்சுனன் தன் உடன் பிறந்தாருடன் சென்று கடும் போர் புரிந்தான். பீமன் சேனைகளைப் பூமியிலிட்டுத் துவையல் செய்தான். துருபதனை எதிர்த்துத் தனஞ்சயன் போர் புரிந்தான். அவனுடைய வில்லை அறுத்து, தேரையும் முறித்து, துருபதனுடைய மார்பகத்தைக் கணைகளால் தொளைபுரிந்து, தன் தேர்க்காலில் பிணித்துக்கொண்டு, வெற்றிச் சங்கம் ஊதித் திரும்பினான்.

அத்தினபுரத்தில் பெரிய அரசவையில் கொணர்ந்து துருபதனை நிறுத்தினான்.

துரோணர் புன்முறுவல் பூத்தார். அரசவை துணுக்குற்றது. ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

துரோணர் துருபதனைப் பார்த்து, "துருபதா! பேரரசனாகிய உன்னை இதோ இந்த இளஞ் சிறுவனான என் மாணவன் அர்ச்சுனன் வென்று தேர்க்காலிலே கட்டிக்கொணர்ந்தான். அர்ச்சுனா! இவனை வெட்டு" என்று நான் ஏவினால், உன் தலை பனம்பழம் போல் உருளும். அந்தண முனிவனாகிய எனக்கு அது ஏற்றதன்று. உனக்கு உன் உயிரைத் தானமாக வழங்குகிறேன். இனியாவது நல்லவர்கள் மனதை நோக வைக்காதே. பண்புடன் நடந்துகொள். பதவிச் செருக்கு பணச் செருக்கு இவைகளை விட்டுவிடு. நண்பனாகிய என்னுடைய ஆற்றலை இப்பொழுதாவது தெரிந்துகொள். மூடனே! ஏன் ஆந்தைபோல் விழிக்கின்றாய்? அர்ச்சுனா! இவனுடைய கட்டை அவிழ்த்துவிடு. இவன் போய்ப் பிழைத்து வாழட்டும்" என்றார்.

அர்ச்சுனன் கட்டவிழ்த்துவிட்டான். துருபதன் மிதிபட்ட புலிபோல் சீறினான். அரசவையை நோக்கிக் கூறுகின்றான்.

"அரசர்களே! என்னை அவமானம் புரிந்த இந்த துரோணரைக் கொல்ல ஒரு மகனையும், என்னைக் கயிற்றால் கட்டிய தனஞ்சயனைத் தன் கையால் கட்டிப் பிணிக்க ஒரு மகளையும் பெறுவேன்" என்று சபதம் புரிந்து புறப்பட்டுச் சென்றான்.

துருபதன் மிக்க மனவேதனையுடன் கான கத்தில் வாழ்கின்ற முனிவர்களிடம் போய்த் தனித்தனியே வேண்டிக் கொண்டான்.

"முனிவர்களே! துரோணரைக் கொல்லக் கூடிய ஒரு புதல்வனையும், தனஞ்சயனை மணந்துகொள்ள ஒரு புதல்வியையும், வேள்வியில் உண்டாக்கித் தாருங்கள். பொன் குப்பியணிந்த நூறு பசுக்களையும், வெள்ளி தங்கப்பாத்திரங்களையும், உயர்ந்த பட்டு விரிப்புக்களையும், பொன்னும் மணியும் தருவேன்" என்றான்.

"துருபதனே! துரோணர் உத்தமமான குணம் படைத்தவர். அவரைக் கொல்லுவதற்குரிய மகனை நாங்கள் உண்டாக்கமாட்டோம்.

அர்ச்சுனனுக்கு மனைவியாகும் ஒருத்தியை யுண்டாக்குவோம்" என்றார்கள். எந்த எந்த முனிவரையடுத்துக் கூறினாலும், அந்த அந்த முனிவர்களும் "ஆக்கத்திற்கு நாங்கள் உதவி செய்வோம், அழிவுக்கு உதவி செய்யமாட்டோம்" என்றே கூறிவிட்டார்கள்.

துருபதன், அதனால் மேலும் வேதனை யுற்றான். ஆலாகப் பறந்து திரிந்தான். முடிவில் முருகவேள் திரு அவதாரம் புரிந்த சரவணப் பொய்கையை யடைந்தான்.

சரவணப் பொய்கையின் தென்கரையில் உபயாசன் என்ற ஒரு தவ முனிவரைக் கண்டான். அவர் பிரமதேவரைப்போல் தவ வொளியால் அக் கானகத்தையே விளக்கிக் கொண்டு அமர்ந்திருந்தார்.

பாஞ்சால மன்னன் அவருடைய பாதமலர்மீது வீழ்ந்து, "தபோதனரே! தங்கட்குப் பொன் குப்பியணிந்த ஆயிரம் பசுக்களையும், பொன் வெள்ளிப் பாத்திரங்களையும், ஆயிரம் ஆயிரம் தங்கப் பவுன்களையும், நவரத்தினங்களையும் தருவேன். துரோணரைக் கொல்லக்கூடிய ஒரு வீர குமாரனையும், விஜயனை வேட்க ஒரு அழகிய அணங்கினையும் கேள்வி செய்து உண்டாக்கிக் கொடும்" என்று வேண்டினான்.

உபயாசர் உரைக்கின்றார். "துருபதனே! நான் நிராசையை உபாசிக்கின்றவன், பொன்னும் மணியும் எனக்கு வேண்டாம். பணத்திற்கு நான் அடிமையாக மாட்டேன். ஆதலால் என்னைப் பொருளால் நீ மயக்க முடியாது. அழிவு வேலையில் நான் ஈடுபடமாட்டேன். அதோ பார். இப் பொய்கையின் வடகரையில் தவம் புரிகின்றாரே. அவர் எனது தமையனார். அவர் பேர் யாஜன். அவருக்குச் சிறிது ஆசையுண்டு என்று நான் அறிகிறேன்.

"ஒரு நாள் ஒரு வனத்தில் ஒரு புறத்தில் நின்றுகொண்டிருந்தேன். ஏகாந்தமான வனம் அதில் ஒற்றையடிப் பாதை. நான் நிற்பது என் தமையனாருக்குத் தெரியாது. அவர் அந்த ஒற்றையடிப் பாதையில் சென்று கொண்டிருந்தார். அவ்வழியில் பழுத்ததும், தங்க நிறமுள்ளதும், நல்ல மணமும் சுவையும் உடையதுமான ஒரு மாம்பழம் கிடந்தது. அதனைக் கண்டதும் என் அண்ணா எடுத்தார். எடுத்த பின் இது யாருடைய பழமோ? பழத்துக்கு உரியவன் இங்கு வைத்து விட்டு நீராடவோ மலசலம் அகற்றவோ சென்றி ருப்பான் அல்லது அவனையறியாது அவன் கையிலிருந்து நழுவியிருக்கும். உடையவன் இதைத் தேடிக்கொண்டு வந்தால் பழம் கிடைக்காது வருந்தக்கூடும். அதனால் நிச்சயம் பெறாத இப்பழத்தை எடுத்துக்கொள்வது பிழை என்று அங்கேயே எறிந்துவிட்டுச் சென்றார். அதனால் என் தமையனாரை ஆசையுடையவர் என்று நான் தீர்மானித்துக்கொண்டேன். ஏன் தெரியுமோ?

"பழத்தைக் கண்டவுடன் ஆசைப்பட்டு எடுத்துக் கொண்டார். பின்னர் அறிவு தலைப்பட்டு ஆராய்ந்து, எடுத்தது பிழையென்று எறிந்தார். எந்தப் பொருளை எங்கு கண்டாலும் அதில் மனம் பற்றாதிருத்தல் அல்லவா நன்மனம் படைத்தவரது தன்மை? கண்டமாத்திரத்தில் கையால் எடுத்து, பின் ஆராய்ந்து, பிழை புரிவது கூடாது என்று சிந்தித்து, இருந்த இடத்தில் பழத்தை எறிந்துவிட்டுச் சென்றார் என் தமையனார். நிராசையுள்ளோரது செயல் அது அன்று. பழத்தைப் பார்த்து இது யாருக்கு உரியதோ என்று மனதாலும் தீண்டாமல் போவதுவே நல்லோர் நெறி. இந்நன்னெறிக்கு, என் அண்ணாவின் செயல் மாறுபட்டுவிட்டது. ஆதலால் அவரைச் சிறிது ஆசையுடையவர் என்று என் உள்ளமாகிய குறிப்பு நூலில் குறித்து வைத்துக் கொண்டேன். மன்னனே! நீ அவரிடம் சென்று உன் காரியத்தை முடித்துக் கொள்ளலாம்.

துருபதன் அதுபடியே யாஜன் என்ற முனிவரி டம் சென்று, அவருக்குப் பொன்னும் மணியும் தந்து, புத்திர காமேஷ்டி வேள்வியைச் செய்வித்து திருஷ்டத்துய்மன் என்ற புதல்வனையும், கிருஷ்ணை என்ற புதல்வியையும் பெற்றான்.

எந்தப் பொருளை யாவர் எப்போது பார்த்தாலும், நமக்கு உரியதல்லாத அதனை மனத்தினாலும் தீண்டாது போகவேண்டும்.

இந்த அருமையான அறநெறியை மேற்கூறிய வரலாறு நமக்கு உணர்த்துகின்றது.

# திருத்தொண்டின் நெறி வாழ

பண்டிதர் இ. நமசிவாயம்

சிவஞான போதத்து "முதல்வனது வியாப கத்தை நோக்கி வியாப்பியமாகலின் அப்பாசங்கள் உடைமையாம். பசுக்களாகிய நாம் அடிமையா வோம். அம் முதல்வன் மாட்டு" என்ற பொருளில் "அவையுடைமையாம் ஆளாம் நாம் அங்கு" என்றும் "ஆன்மா தண்ணீரைச் சேர்ந்த உப்புப் போல முதல்வன் திருவடியைத் தலைப்பட்டு முதல்வனுக்குச் சேடமாம். முதல்வன் திருவடி அவ்வான்மாவை விட்டுக் கவர்த்தலின்றி இயைந்து நிற்கும் ஆகலான்" என்ற பொருளில் "அப்பணைந்த உப்பின் உளமணைந்து சேடமாம் கப்பின்றா மீசன் கழல்" என்றும் கூறப்படலின் ஆன்மாக்கள் பெத்த நிலை முத்தி நிலை இரண்டிலும் முதல்வனுக்கு அடிமை என்பது விளங்குகின்றது. மாதவச் சிவஞான சுவாமிகளும் "அவை யுடைமையாளா நா மங்கு" என ஓதலின் "ஏனைப் பசுபாசங்களும் முதல்வனுக்குச் சேடமே யாமாயினும் அவை பொது இயல்பு பற்றிய சேடமாவதல்லது சிறப்பியல்பு பற்றிய சேடமா காமையின் இதனை வேறெடுத்தோதினார்" என்று கூறுவர். இன்னுமவர் "யாதொன்று யாதொன்றன் பொருட்டேயாய்த் தனக்கெனச் சுதந்திரமின்றி நிற்கும் அஃது அதற்குச் சேடமெனப் படுமாகலின், அவனருளாலல்லது ஒன்றையும் செய்யானாய்க் கப்பின்றி இயைந்து நிற்கும் ஈசன் கழலையே அறிந்து இச்சித்து அனுபவித்தலாகிய முதல்வனது வழிபாட்டின் பொருட்டு உரிமை யெய்திய ஆன்மா முதல் வனுக்குச் சேடமாகிய வாறுணர்க" என்று கூறுத லானும் திருத் தொண்டின் நெறி வாழ வருஞானத் தவ முனிவரா கிய அப்பரடிகள் **'பாரமீசன் பணயல தொன்றிலர்'** என்று கூறுதலானும் ஆன்மாக்கள் தமக்கென ஒன்றின்றி ஈசன் பணியே செய்தல் வேண்டும் என்பது பெறப்படுகிறது. மேலும் அப்பரடிகள்

**'வாழ்ந்த வாயும் நினைக்க மடநெஞ்சும்**
**தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்**
**சூழ்ந்த மாமலர் தூவித் துதியாதே**
**வீழ்த்த வரவினை யேன்நெடுங்காலமே'**

என்று கூறியதிலிருந்தும் **'தலையே நீ வணங்காய்'** என்பது முதலாகத் திருவங்கமாலை யிற் கூறிய வற்றிலிருந்தும் ஆன்மாக்கள் மனம் வாக்குக் காயம் என்ற திரிகரணங்களாலும் இறைவன் தொண்டு செய்தல் வேண்டுமென்பது பெறப்படும்.

இங்ஙனம் தொண்டு செய்யும் அன்பர்களைத் தாங்குதல் இறைவன் கடன் என்பதை

**'நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்**
**தென் கடம்பைத் திருக்காக் கோயிலின்**
**தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்**
**என்க டன்பணி செய்து கிடப்பதே'**

என்ற அருட்பாவால் அப்பரடிகள் காட்டுவர். இவ் வருட்பாவில் "கிடப்பதே" என்ற சொல் பயன் கருதாது பணி செய்தல் வேண்டும் என்பதை விளக்குதல் காண்க. திருத்தொண்டர் புராணத்தில் "வீடும் வேண்டா விறலின் விளங்கினார்" என்றவாறுங் காண்க. ஆறுமுகநாவலரவர்கள் **'விபூதி உருத்திராக்கம் என்னும் சிவசின்னங்கள் தரித்து, சிவனை இடையறாது மேன்மேலும் பெருகி வளரும் மெய்யன்பினோடு மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் வழிபட்டு உய்தலே நாம் அருமையாகப் பெற்ற இச் சரீரத்தினால் பெறப்படும் பயன் என்பது தெளிக'** எனத் திருநாவுக்கரசு நாயனார் புராணத்துச் சூசனத்தில் கூறியதும் இங்கு கருதத் தக்கது. சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு பாதங்களிலே நின்று செய்யப்படுவனவும் திருத்தொண்டென்றே சொல்லப்படும். இது நாவலர் அவர்கள் திருத்தொண்டர் புராண உபோற்காதத்துக் கூறியவாற்றால் அறியப்படும்.

எமது சைவமும் தமிழும் அடியவரையே பெரியவர் என்று கூறும். "அடியார்க் கெளியன் சிற்றம்பலவன்" என்று இறைவன் கூறியதனால் அவ்விறைவனிலும் அடியவர்கள் பெரியவர்கள் என்பது காண்க. இன்னும் தடுத்தாட் கொண்ட புராணத்து இறைவன் சுந்தரமூர்த்தி சுவாமி களுக்குக் கூறிய கூற்றாக வரும்

**'பெருமையாற் றம்மை யொப்பார்**
**பேணலா லெம்மைப் பெற்றா**
**ரொருமையா லுலகை வெல்வா**
**ரூனமே லொன்று மில்லா**
**ரருமையா நிலையினின்றா**
**ரன்பினா லின்ப மார்வா**
**ரிருமையுங் கடந்து நின்றா**
**ரிவரைநீ யடைவாய்...'**

என்ற செய்யுளையும் நோக்குக. தொண்டர்தம் பெருமையைச் சொல்ல வல்ல சேக்கிழார் சுவாமிகள் திருக் கூட்டச் சிறப்பில் **'பேச வொண்ணாப் பெருமை பிறங்கினார் கோதிலாத குணப் பெருங் குன்றனார்'** என்றும் பாயிரத்தில்

**'அளவி லாத பெருமையராகிய**
**வளவி லாவடி யார்புகழ் கூறுகே**
**னளவு கூட வுரைப்பரி தாயினு**
**மளவி லாசை துரப்ப வறைகுவேன்** என்றும்

(அடுத்த இதழில் தொடரும் ..............)

# சந்தேகம் தெளிதல்

விளக்கமளிப்பவர் வாரணன்

(இப்பகுதியில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை எழுதி விளக்கம் பெறலாம்)

கேள்வி : திருமதி. பராசக்தி அவுஸ்திரேலியா

"முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே" என்ற இரு அடிகள் திருவாசகத்துத் திருவெம்பாவையில் வருகின்றன. இவற்றில் முதலடியின் பொருள் விளங்குகிறது. இரண்டாமடியின் பொருள் தெளிவாக இல்லை. இதன் விளக்கம் என்ன?

பதில் : இத் தொடர்களுக்கு "பழமைக்குப் பழமையானவனே! புதுமைக்குப் புதுமையானவனே!" எனப் பொருள் கண்டு பொதுவாக நூல்கள் விளங்குகின்றன. மகாவித்துவான் சி. அருணைவடிவேலு முதலியார் "முற்பட்டவையாகிய பழமையான பொருள்களுக்கும் முற்பட்ட பழமையான பொருளே! பிற்பட்டனவாகிய புதிய பொருள்களுக்கும் புதிய பொருளாகி நின்ற அத்தன்மையனே! என்று விளக்கம் அளிக்கிறார். இவ் விளக்கம் தெளிவாக உள்ளது.

பின்னைப் புதுமைக்கு - பின்னர் வரும் (இனிவரும்) புதிய பொருள்களுக்கு, பேர்த்தும் மறுபடியும், மீண்டும், பெற்றி - இயல்பு, தன்மை, அப் பெற்றியனே - அத் தன்மையனே. இத் தொடர்களை சித்தாந்த பின்னணியிலும் விளக்கலாம். ஒவ்வொரு ஊழிக் காலத்திலும் இப் பிரபஞ்சம் தோன்றி மறைகிறது. நாம் காணும் பிரபஞ்சத்தின் தோற்றத்துக்கு முன்னர் இறைவன் பழம் பொருளாக இருந்தான். "முன்னைப் பழம் பொருள்" அவன். இப் பிரபஞ்சம் தோன்ற முன்னரும் பிரபஞ்சத் தோற்றமும் மறைவும் மாறி மாறி வந்தன. அவற்றுக்கும் முன்னைய பழம் பொருள் அவன். இதனை "முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பரம் பொருளே" என்று கூறி மாணிக்கவாசகர் விளக்குகிறார். முன்னைப் பழம் பொருட்கும் பழம் பொருளான அவனின் இயல்பு பின்வரும் புதுமைக்குப் புதுமையாகவும் உள்ளது இந்து தலங்கள் எல்லை கடந்த இயல்பு இது. இப் புதுமை இப் பிரபஞ்ச முடிவோடு மட்டும் இருப்பதல்ல. இதன் பின்வரும் ஊழிக் காலங்களின் பின்னரும் புதுமையாக இருப்பது அவனின் இயல்பு. இதனை பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே" என்று மணிவாசகர் விளக்குவது சிந்தனைக்கு விருந்தாகும்.

கேள்வி : க. மகாதேவன் கொழும்பு

எழு பிறப்பு, நால்வகைப் பிறப்பு என்று கூறப்படுவதன் விளக்கம் என்ன?

பதில் : எழு பிறப்பு, எழுமை ஆகிய சொற்கள் ஏழு பிறப்புக்களைக் குறிக்கின்றன. இவற்றைச் சமய இலக்கிய நூல்களில் காணக் கூடியதாக இருக்கிறது. திருக்குறளிலும் இவை வருகின்றன. "ஏழு பிறப்பும் தீயவை வேண்டா" (குறள் - 62) "எழுமையும் ஏமாப்பு உடைத்து" (குறள் - 398) ஆகியவை உதாரணங்கள் உயிர் எடுக்கும் ஏழுவகையான பிறவிகளை இச் சொற்கள் குறிக்கின்றன. மக்கள், தேவர், விலங்குகள், பறப்பன, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்பவை இவை. ஏழு வகை பிறப்புப் போல், நாலு வகையாகவும் இவற்றைத் தொகுப்பதுண்டு. நால்வகைத் தோற்றம் என்று இவை குறிக்கப்படும். முட்டையிலிருந்து (அண்டசத்திலிருந்து), கருப்பையிலிருந்து (சராயுசத்திலிருந்து) வேர்வையிலிருந்து (சுவேதசத்திலிருந்து) வித்து, வேர், கிழங்கிலிருந்து (உற்பீசத்திலிருந்து) உயிர்கள் தோன்றுகின்றன. இவையே நால்வகைத் தோற்றங்கள். உயிர்கள் தோன்றுகின்றன என்பது அவை எடுக்கும் உடம்பைக் குறிக்கும்.உயிர்களுக்குத் தோற்றமும் அழிவும் இல்லை.

# நினைவிற் கொள்வதற்கு

பார்த்திப

ஆவணி

| | | | |
|---|---|---|---|
| 01 | 17.08.2005 | புதன் | மாதப்பிறப்பு, பிரதோஷ விரதம் |
| 02 | 18.08.2005 | வியாழன் | நடேசரபிஷேகம் |
| 03 | 19.08.2005 | வெள்ளி | பூரணை விரதம் |
| | | | வரலக்ஷ்மி விரதம் |
| 05 | 21.08.2005 | ஞாயிறு | ஆவணி ஞாயிறு |
| 07 | 23.08.2005 | செவ்வாய் | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| 10 | 26.08.2005 | வெள்ளி | கார்த்திகை விரதம் |
| 12 | 28.08.2005 | ஞாயிறு | ஆவணி ஞாயிறு |
| 15 | 31.08.2005 | புதன் | செருத்துணையார் குருபூசை |
| 16 | 01.09.2005 | வியழன் | பிரதோஷ விரதம் |
| 17 | 02.09.2005 | வெள்ளி | புகழ்த்துணையார் குருபூசை |
| | | | அதிபத்தர் குருபூசை |
| 18 | 03.09.2005 | சனி | அமாவாசை விரதம் |
| | | | இளையான் குடிமாறன் குருபூசை |
| 19 | 04.09.2005 | ஞாயிறு | ஆவணி ஞாயிறு |
| 20 | 05.09.2005 | திங்கள் | மறைஞானசம்பந்தர் குருபூசை |
| 22 | 07.09.2005 | புதன் | விநாயக சதுர்த்தி விரதம் |
| 23 | 08.09.2005 | வியாழன் | ரிஷி பஞ்சமி |
| 24 | 09.09.2005 | வெள்ளி | ஷஷ்டி விரதம் |
| 25 | 10.09.2005 | சனி | குலச்சிறையார் குருபூசை |
| 26 | 11.09.2005 | ஞாயிறு | ஆவணி ஞாயிறு |
| 27 | 12.09.2005 | திங்கள் | ஆவணி மூலம் |
| | | | குங்குலியக் கலயர் குருபூசை |
| 30 | 15.09.2005 | வியாழன் | பிரதோஷ விரதம் |

Registered as a NewsPaper at the G.P.O.

உ
சிவமயம்

# புத்தக விற்பனை

- விதியை வெல்வது எப்படி?
- திருவாசகம்
- Understanding Saiva Siddhanta Philosophy.
- And Outline of Saivism
- சைவத்தை அறியுங்கள்
- சிவபுராணம் விளக்கவுரை
- வள்ளுவம் வழங்கும் தமிழ் தத்துவம்
- உயர்வுமிகு சைவசமயம் உடன்பாடற்ற வழிபாடு (பிற அறிஞரின் கட்டுரைகளின் தொகுப்பு)
- தத்துவ உலகில் தடம் பதித்த பண்டிதர் மு.கந்தையா
- ஈழத்துச் சித்த சிரோமணிகள்
- நல்லை ஆதீன முதல்வர் நற்சரிதம்

ஆகிய நூல்கள் விற்பனைக்கு உண்டு

கிடைக்கும் இடம்:

**சைவநீதி**

195, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13.

எங்களிடம்,

ஐம்பொன், வெள்ளி, பஞ்சலோகம் வார்ப்பு விக்கிரகங்கள், வீட்டுப்பூசைப் பொருட்கள், கலைநயம் மிக்க சிலா விக்கிரகங்கள், கோபுரக்கலசங்கள், பட்டுக்குடைகள், கும்பக் குடைகள், சந்திரவட்ட, பூச்சக்கரக் குடைகள், ஆலவட்டம், சுருட்டி மகர தோரணம், திரைச் சீலைகள், வெள்ளி, முத்து, கிரீடங்கள், வாக மாலை மற்றும் மின்சார மங்கள வாத்தியங் கள், இந்திய கலைத்திறம் படைத்த குத்து விளக்குகள், வீட்டு அலங்காரப் பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும்.

**கலையரசி**

23/1, விவேகானந்த மேடு, கொழும்பு-13.

தொ.பே: 2478885

## சைவநீதி மாத இதழ்

பெறுமதி விபரம்

தனிப் பிரதி ரூபா 25.00 ஆண்டொன்றிற்கு ரூபா 250.00 ஏனைய நாடுகளில் ஆண்டொன்றிற்கு ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US$ 15

சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.

சந்தா அனுப்பவேண்டிய முகவரி

*C. Navaneethakumar,*
*No. 30, Ramya Road,*
*Colombo - 04.*
*Sri Lanka.*
*Tel : 2580458*

Regd No. QD/27/News 2005 இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் லக்ஷ்மி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.